Registered as a Newspaper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 06 [22-10-1993] வெள்ளிக்கிழமை ஓசை 246

## 'பென்சிலின்' கொள்வனவில் அவதானம் தேவை

பென்சிலின் மருந்து தவறான முறையில் யாழ். தனியார் மருந்து விற்பனைச் சாலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இம்மருந்துகளை வாங்குவோர் அவதானமாக பார்த்து வாங்கும்படியும் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். மூட்டுவாத காய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும் ''வென்சதீன் பென்சிலின்'' மருந்துப் போத்தலின் லேபலும் வெட்டுக் காயங்கள் மற்றும் சாதாரண புண்களைக் குணப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ''கிறிஸ்ரல்

(10ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் தாக்குதல் நடத்தவென ராணுவத்தில் விசேட படையணி!

## இரகசியமாக உருவாகி வருகிறது

(கொழும்பு)

வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கென தயாராகி வரும் சிறிலங்கா இராணுவம், இத்தாக்குதல்களுக்குப் பயன்படுத்தவென புதிய படையணி ஒன்றை உருவாக்கி வருவதாக அறியவருகின்றது. ஆர் டி. எவ் என அழைக்கப்படும் இவ் "விரைந்து தாக்கும படையணி" வடக்கில் மேற்கொள்ளப்பட இருக்கும் தாக்குதல்களுக்கென விசேடமாக உருவாக்கப்படுவதாகவும் தெரியவருகிறது

சிறிலங்கா ஆயுதப் படைப் பிரிவுகளான கஜபாகு படையணியிலிருந்தும், சிங்க படையணியிலிருந்தும் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு இப் புதிய படையணி தயார்ப் படுத்தப்பட்டு வருகிறது

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இப்படையணி செயற்படும். இப் படையணிக்கு பல்வேறு நவீன ரக ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் ஆயுதங்களை கையாள்வதிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் இப் படையணி

[10ஆம் பக்கம் பார்க்க]

## பொருள்கள் அனுமதிப்பவர் பாதையை தடுப்பது ஏன்?

### எதிர்க்கட்சி உறுப்பினர் கேள்வி

(கொழும்பு)

வடபகுதி மக்களுக்குத் தேவையான பொருள்களில் பெரும்பகுதி கிளிநொச்சி கிளாலி படகுசேவை மூலம் செல்கிறது இதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்படுகிறது, இவ்வாறு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டபோதும் ஏன் அரசாங்கம் கிளாலி போக்குவரத்தை தடை செய்யவேண்டும் என நேற்று பாராளுமன்றத்தில் சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ரதவத்த கேள்வி எழுப்பினார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''தமிழ்மக்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்

[10ஆம் பக்கம் பார்க்க]

## அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையங்களில் பெறலாம்

சிறுபணி செய்பவர்களை பொது எழுதுவினைஞர் தரம் ii [ஆ] பிரிவுக்கும் மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு ii [ஆ] பிரிவுக்கும் நியமிப்பதற்கான பரீட்சைகள் இன்றும் நாளையும் யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளன.

மேலும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிநெறி இறுதிப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் அடுத்த மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளிலும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில்நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளாதோர் பரீட்சை நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. [பா]

## மண்மீட்பு போராட்டத்தில் மகளை இணைத்த தாய்

(வடமராட்சி)

பெற்றதாய் தனது மகளை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்த சம்பவம் ஒன்று வடமராட்சியிலும் நடைபெற்றது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆ. கங்காதேவி என்பவர் தனது மகள் செல்வராணியை தானே கூட்டிச் சென்று போராட்டத்தில் இணைத்துள்ளார்.

(யோ)

### தாயே!

நின்மகவை எழுப்பு!
நெற்றியிலே........திலகம் இடு
போ என்று சொல்லி-
போர்க் களத்துக்கு அனுப்பிவை

## வீரச்சாவு



லெப்டினனட் நடேஸ்/அரவன்



2ஆம் லெப். செல்வன்/அணு

திருமலை மாவட்டம் திரியாய் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முகாமொன்றைக் கடந்த 16ஆம் திகதி திடீரெனச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற

[10ஆம் பக்கம் பார்க்க]

## விவசாய உற்பத்தியில் முனைப்புடன் ஈடுபடுக

### விவசாயிகள் தினவிழாவில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

''இன்று எமது மண்ணினுடைய தேசிய பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் விவசாய உற்பத்தியில் நாம் அனைவரும் முனைப்புடன் ஈடுபட வேண்டும்'' என அனைத்துலக விவசாயிகள் தினத்தை முன்னிட்டு நேற்று இளங்கலைஞர் மணடபத்தில பனை தென்னை வள கூட்டுறவுறவுச் சங்கங்களும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்திய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: ''விவசாயத்தில ஈடுபடுவோர் தமது பிற்காலத்தில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களில் பனை தென்னை வள

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து வந்த அரச ஊழியர் கைது

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை மன்னார் தீவிலிருந்து கடத்திவந்ததாக கூறப்படும் நான்குபேர் மன்னார் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

இவர்களில் அரச ஊழியர்களும் அடங்குவர். இராணுவ சிப்பாய் ஒருவரின் உதவியுடனேயே இது நடைபெற்று வந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

## இனப்பிரச்சினையை தீர்க்க அரசு முயலவில்லை

### அனில் முனசிங்க உரை

[கொழும்பு]

''தற்போதைய அரசு இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்பபதற்கான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை'' என சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம், பியான அனில் முனசிங்க நேற்று பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

இன்று நாட்டில் நிலவும் மிக முக்கியமான பிரச்சினை இனப்பிரச்சினையாகும்,

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பணிப்பிற்கேற்பவே தமிழ் இளைஞர்கள் கைது

### நிஹால் விக்கிரமசிங்க தெரிவிப்பு

அரசின் பணிப்புரைக்கு அமையவே கொழும்பில் படையினர் தேடுதல் வேட்டையை மேற்கொள்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது எதிர்க்கட்சியினர் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இரவு பகலாக சிறிலங்கா படையினர் வீடு

(10ஆம் பக்கம் பார்க்க)

## அநுரா வெளியேற்றம் கட்சியை பாதிக்காது

### -சிறிமாவோ

''அநுரா பண்டாரநாயக்க சுதந்திரக்கட்சியில் இருந்து விலகியதனால் கட்சிக்கு பின்னடைவு எதுவும் இல்லை அவர் விரும்பினால் அவரை மீண்டும் கட்சியில் சேர்க்க தயார்'' என சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

'சந்தேசிய' வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்த அவர் ''கட்சி ஒன்று வளர்ச்சி பெறுவது கொள்கையினால் மட்டுமே தவிர தனிப்பட்ட நபர்களினால் அல்ல அதனால் தான் எஸ். டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்க மறைந்த பின்னரும் கட்சியைத் தொடர்ந்து கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது'' என்றார்.

## வரி விளம்பரம்

### யாழோசை இசை வகுப்புகள்

சகல புதிய இசை வகுப்புகளும் 24-10-93 விஜயதசமி யன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். யாழோசை 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6306)

### விற்பனையாகிறது

நவராத்திரியை முன்னிட்டு விற்பனையாகிறது நவராத்திரி தோத்திரப் பாமாலை வித்துவான் சி. குமாரசாமி B. A. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை விலை20/- மட்டும் (சி-7731)

### தவறிவிட்டது

20-10-93 அதிகாலை கிளாலிக்கரையிலிருந்து யாழ். நோக்கி காரில் வரும்போது முக்கிய பொருட்கள் அடங்கிய பிரயாணப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (6350)

### விஞ்ஞான வினா விடை

ஆண்டு - 6. 7. 8. ஆக்கம் Y. இராஜஇரத்தினம் M. Sc விற்பனை ஆகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை. [சி-7734]

### மகாதேவா ஜோதிடம்

உறுதியான பலாபலனை அறியலாம் 239, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச் சந்தி காலை 10.00 — 1.00 மணி. 140 செல்லர் வீதி, கல்வியங்காடு, பிற்பகல் 3,00 — 6,00வரை சந்திக்கலாம். [6335]

### "சக்தி பசளை"

சக்தி ஓர் இயற்கைப்பசளை கூட்டெரு முறையில் தயாரித்தது. வீட்டுத்தோட்டத்திற்கு ஓர் வரப்பிரசாதம். மண் வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கிறது அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. பக்கற் ஒன்று ரூபா 9/- 25 பக்கற் கொண்ட பெட்டி ஒன்று ரூபா200/- மட்டுமே. ''மில்க்வைற்'' (சி/7736)

### ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு4 பரீட்சை [புலமைப் பரிசில் 1994] தொடர் பரீட்சை 13 வது 23 10 93 சனி மு. ப. 8 00, மு. ப. 11-00 நடைபெறும் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [6340]

### கம்பியூட்டர் கல்வி

**BASIC LANGUAGE**
**4 MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் : நாளை
**23-10-1993**
8.30 மணி
கூடிய செய்முறைப் பயிற்சி: இலவச அச்சடித்த பாடக் குறிப்பு; பயிற்சி முடிவில் சான்றிதழ்.
கட்டணம் : மாதம் 400-மட்டுமே

**School of Business Administration**
Pioneers in Computer Education
16, 3rd CROSS ST.
JAFFNA.
(சி-7745)

# நினைவு கூருகின்றோம்:.. 1993- 10- 22

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் கொழும்புத்துறை முகப் பகுதியில் சிறிலங்கா காவல்துறையினருக்குக் குண்டு வைக்க முயல்கையில் தவறுதலாக குண்டுவெடித்ததில் வீரச்சாவெய்திய -

★ **பரி/அமுதன்** (இரத்தினசபாபதி பரிபூரணம் - கரம்பொன், ஊர்காவற்துறை-யாழ்)

1986ஆம் ஆண்டு மன்னார் - மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**விஜி/பாலதேவன்** (சுந்தரம்பிள்ளை மரியரெட்ணம்- முருங்கன் மன்னார்)

1987ஆம் ஆண்டு அராலியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 29 தமிழர்கள்.

அச்சுவேலி, சுண்டுக்குளிப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் உட்பட 05 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு மட்டு, குருக்கள் மடம் பகுதியில் தேசவிரோதிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு வீரச்சாவெய்திய-

**சின்னத்தம்பி** (சதாசிவம் சகாயராசா - தாழங்குடா - மட்டு)

மணலாறு - நித்திக்குளத்தில் இந்தியப்படையினரின் கண்ணிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**கப்டன் சதீஸ்** (மூத்ததம்பி தெய்வேந்திரம் நாவற்காடு, வரணி - கொடிகாமம்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**கிறாமிய இசைக்கலைஞர்**
**செல்லையா கிலோற்றன்** (— 18/3, மடம் வீதி - யாழ்)

ஊர்காவற்துறை, பொன்னாச்சி கடைச்சந்தியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் தம்பதியினர்.

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ஸரீபவ/தலீபன்** (— மதியழகன் - நுணங்கை, அளவெட்டி - யாழ்)

மட்டு - தரவையில் இந்தியப்படையினருடன் மேற்கொண்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லக்ஸ்மன்** (கா. மனோகரன் - சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

1990ஆம் ஆண்டு பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**ராஜசேகர்** (நடராசா விக்கினேஸ்வரன் - 6-ம்வட்டாரம், கும்புறுப்பிட்டி -திருமலை)

**ஜெயா** (லதா கனகராசா - வன்னிச்சியம்மன் கோவிலடி - வல்வெட்டித்துறை)

**மதுபாலன்** (இரத்தினம் இராஜேந்திரன் - காட்டுப்புலம், தொண்டமானாறு யாழ்)

**திலீப்** (சண்முகராசா சிறிதரன் - சுன்னாகம் யாழ்.)

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**நிர்மலன்** (தியாகராஜா ரஜீவன் - கோப்பாய், தெற்கு, இருபாலை-யாழ்.)

**கபிலன்** (.... )

காங்கேசன்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மகேசன** (வல்லிபுரம் இராமச்சந்திரன் - தவசிகுளம், மிருசுவில் - கொடிகாமம்)

தீவகம் - இறுப்பிட்டிக் கடற்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொதுமகன்

1991ஆம் ஆண்டு பூநகரியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**உடையப்பன்** (நா. சதானந்தன் - பல்லவராயன்கட்டு, முழங்காவில், மன்னார்)

**சிறேசிகுமார்** (ம. ஞானப்பிரகாசம் - குஞ்சுக்குளம் முருங்கன் மன்னார்)

யாழ். கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**வாசன** (பரமலிங்கம் - மானிப்பாய் - யாழ்)

1992ஆம் ஆண்டு திருமலை புல்மோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கலைச்செல்வன்** (கணபதிப்பிள்ளை தமிழ்வேந்தன்- 5ஆம் வட்டாரம், மூதூர்-திருமலை)

கிளி - ஆனையிறவு உப்பள தொடர் காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மாணிக்கவாசன்** (கணபதிப்பிள்ளை லோகநாதன்-தேவிபுரம், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**தேவன்** (ஸ்ரெனிஸ்லாஸ் சிவாகரன் - உடையார்கட்டு, முல்லைத்தீவு)

**கப்டன் பாணன்/வினோத்** (ஆனந்தராசா குகராசா திருநகர்-கிளிநொச்சி)

**லெப். இசைவாணன்/பிரான்** (பொன்னுத்துரை குணரட்ணம்- நீதிபுரம்-மாங்குளம்)

**லெப். இன்பன்** (அரியநாயகம் ரதன் - இலுப்பைக்குளம்- வவுனியா)

**2 ம் லெப். பிரதீபன்/ரங்கன்** (சிவராசலிங்கம் பதீமசிறி- வட்டக்கச்சி-கிளிநொச்சி)

**2 ம் லெப் வேங்கை** (வல்லிபுரம் விவேகானந்தன்- ஓமந்தை - வவுனியா)

**2-ம் லெப். குட்டிக்கண்ணா** (கணபதிப்பிள்ளை சிவகுமார் - வேப்பங்குளம்- வவுனியா)

**காங்கேயன்/தர்சன்** (பாலசிங்கம் விமலன் - கொத்தம்பியாகுளம் - துணுக்காய்)

**மலரவன்** (சின்னத்தம்பி புஸ்பராசா - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

**முருகன்/விக்கினேஸ்** (கணேஸ் வின்சன்-நொச்சிகுளம், ஓமந்தை - வவுனியா)

**ஞானதாஸ்** (பால்ராஜ் அரியதாஸ் - 3-ம் பிளாஸ் - கிளிநொச்சி)

**2-ம் லெப். மதனராசா/மதனராஜ்** (நல்லதம்பி ஜெயரூபன் கிரிசுட்டான், நெடுங்கேணி, மன்னார்)

**2 ம லெப். தமிழரசன்** (சத்தியானந்தன் சிவகுமார்- இலந்தைக்குளவீதி, அரியாலை- யாழ்.)

**2-ம் லெப் பாண்டியன்** (இராசு ரமேஸ் - கொக்குவில் மேற்கு - யாழ்.)

மூதூரில் இலங்கைத்துறை ஆற்றில் மீன்பிடிக்கச் சென்றபோதுஇனந்தெரியாதோரால் வெட்டிக் கொலை செய்யபப்ட்ட தமிழ்மகன்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/7750)

# காலி பொலிஸ் சூடு விசாரணைக் குழு இல்லை

[கொழும்பு]

அண்மையில் தென்மாகாண முதலமைச்சர் பதவி ஏற்ற போது காலியில் பொலிசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் இருவர் பலியானது தொடர்பாக விசாரணைக் குழு எதுவும் அமைக்கப்படமாட்டாது என பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைக்குழு வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபையில் நேற்று வலியுறுத்தியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

---

**மாதாந்தம் 40 பரிசில்களை நீங்கள் வென்றிட**

## ஒரு சந்தர்ப்பம்

அ. நீங்கள் செய்ய வேண்டியது

உங்களிடமுள்ள பின்வரும் போத்தல்களில் ஏதாவது [5] ஐந்தை கீழே குறிப்பிட்ட இடங்களில் ஒப்படைத்து அவற்றுக்குரிய பணத்தை பெறுவதுடன் வெற்றுப் போத்தல் சீட்டிழுப்புக்கான ரிக்கட்டை இலவசமாகவும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆ. போட்டிக்கான போத்தல்கள்
1. ஜாம்/புறோடினேக்ஸ் 2. பியர் 3. கோடியல்

இ. போத்தல்கள் ஒப்படைக்கும் இடங்கள்

1. ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் 14 சீனியர் லேன், யாழ்ப்பாணம். 2. அறிவகம் - சாவகச்சேரி,
3. சுபாஸ் பேக்கவுஸ் நெல்லியடி. 4. பேரம்பலம் மருந்துக் கடை சுன்னாகம். 5. சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு 6. சபாரிஸ் சுண்டிக்குளி 7. ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தைச் சந்தி 8 இ இராஜதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை. 9. லிங்கம் கூல்பார் மானிப்பாய் 10. கந்தசாமி அன் சன்ஸ் சங்கானை.
11. மாருதி ஸ்ரோர்ஸ் கே. கே எஸ் வீதி, வல்வெட்டித்துறை 12. வி. சுந்தரலிங்கம் ரஜனி பீடா ஸ்ரோர்ஸ் இமையாணன் உடுப்பிட்டி.
13. செல்வராசா ஸ்ரோர் முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை. 14 செ சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய்.

ஈ. மாதாந்த சீட்டிழுப்பு ஒவ்வொரு மாதமும் 5-ம்திகதி நடைபெறும்.

**TASTELINE INDUSTRIES (PVT) LTD**
14, SEENIAR LANE JAFFNA.

[சி-7757]

---

தமிழ்த்தாய் புத்தகசாலையில்
விற்பனைக்கு வந்துவிட்டது!

**எமது அடுத்த தொகுதி புத்தகங்கள் விற்பனைக்கு வந்துவிட்டன.**

**இத்துடன்**
**O/L மாதிரி வினாத்தாள்கள்**
**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

**என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

## தமிழ்த்தாய் புத்தகசாலை

1:1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்நிலைய அருகாமை)

★ குறிப்பு: வியாபாரிகட்கு கழிவு வழங்கப்படும்.
(சி 7753)

# மூன்றாம் உலகு மீதான ஆக்கிரமிப்பு; மேற்குலக தொடர்பு சாதனங்களின் இலக்கு

இன்றைய உலகின் 500 கோடி மக்கள் ஒரு முற்றுகையிடப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். இது இராணுவ முற்றுகையல்ல செய்தி முற்றுகை. சூழல்மாசடைதல், எயிட்ஸ், அணுவாயுதங்கள் மனிதனின் புற அழிவை ஏற்படுத்த புதுவகை கருத்துக் கொல்லி நோயொன்று, மனிதனின் இயற்கையான இயற்கையோடு ஒட்டிய எண்ண வோட்டங்களை, ஏன் எண்ண ஊற்றுக்களையேகொல்லாமலேயே கொன்று விடுகின்றது. இப்புவியை கைப்பிடிக்குள் அடக்கும் கிராமமாக்கிய (Glolpal Village) உலகின் இன்றைய புரட்சியாக கருதப்படும் நவீன மக்கள் தொடர்புச் சாதனங்களை தமது கட்டுப்பாட்டில் வத்திருக்கும் முடிசூட மன்னரே இதற்கு மூலகாரணமானவர். கணனிகள், செய்மதிகள் போன்றவற்றை உள்ளடக்கிய இவர்களது பரந்து விரிந்த தொடர்புச் சாதன சாமிராச்சியங்கள் சமகால உலகு பற்றிய கண்ணோட்டத்தைதமது முதலாளிய நலன்கட்கு ஏற்ப மாற்றி, திரிவுபடுத்தி மக்களை முற்றாக குழப்பத்தில் ஆழ்த்தி விடுகின்றன. மக்கள் மனங்களை முற்றுகையிடுகின்றன எச் செய்தியை எப்போது எவ்வடிவத்தில் கொடுக்க வேண்டும்என்பதை இவர்களே தீர்மானிக்கிறார்கள். இதனால் இன்று எவரும் தாங்கள் சரியாக சிந்திப்பவராகவோ அல்லது சுதந்திர எண்ணங்கள் உடையவர்கள் என்றோ கூறமுடியாத நிலை தோன்றி விட்டது.

இப்போது இவர்கள் மூன்றாம் உலக தொடர்புச் சாதனங்களை முற்றாக தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தமது சாமிராச்சியத்தைவிரிவு படுத்த முயல்கிறார்கள். அண்மையில் மேற்குலக தொடர்புச் சாதன தனியுரிமையாளரான மேடொச் Murdoch) கொங்கொங்கிலிருந்து தற்போது ஆசியாவை ஒரு உலுக்கு உலுக்கி வரும் ஸ்டார் (Star T. V) தொலைக்காட்சி அமைப்பை விலைக்கு வாங்க முயல்வது மிக்க பரபரப்பான செய்தியாகி விட்டது. இலாபம் கிடைக்குமெனில் இவர்கள்எவ்வித செய்திகளையும் ஒளிபரப்ப தயங்கமாட்டார்கள். வளைகுடாப்போரின் போது ஈராக் தரப்புச் செய்திகளை ஒளிபரப்ப அனுமதி பெற்ற CNN நிறுவனம் கொழுத்த இலாபத்தைச் சம்பாதித்தது. அமெரிக்க அரசின் கண்டனம் இவர்களை எதுவும் செய்ய முடியவில்லை ஏனென்றால் அரசுகளை கட்டுப்படுத்தும் வல்லமை படைத்தவர்கள் இவர்கள்.

எனினும் இத்தகைய நிலைமைகட்கு மாறாக உண்மையான செய்திகளை மறுபக்கத்தின் உண்மைதனை தர முயலும் சில அமைப்புக்களும் உள. ஆனால் ஒப்பீட்டு நோக்கில் இவை மலைக்கும் மடுவுக்கும் உள்ள அளவு வேறுபடுகின்றன. இவ்வகையில் மலேசியாவில் தலைமை அலுவலகத்தை கொண்டியங்கும் மூன்றாம் உலக செய்தியமைப்பு முக்கியமானது (Third World Net WorkFeatures) மறைக்கப்பட்ட செய்திகளை இவை வெளிக்கொணர முயல்கின்றனர்.

## இசுரேலியகொலைக் குழுக்கள்

மிக அண்மையில் அரங்கேறிய சில நிகழ்வுகள் இங்கு எடுத்துக் காட்டப்பட வேண்டியவை. அண்மையில் கைச்சாத்தான இசுரேலிய- பாலத்தீனிய உடன்பாடு பற்றி எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு தொடர்புச் சாதனங்களில் முக்கியம் தரப்பட்டவை. மகிழ்ச்சியாக பாலத்தீனியர் ஆடிப்பாடுவதும், அரபாத்தின் புன்முறுவல் பூத்த முகமும், கெய்ரோவில் புதிதாக பயிற்சி பெறும் பாலத்தீனிய எதிர்கால காவல் துறையினரும் சமகாலத்தில் உலகெங்கும் தொலைக்காட்சிகளில் உலக வார இதழ்களில் ஒருங்கே வெளியாகி உலகையே ஒரு குலுக்குக் குலுக்கின எங்கு பார்த்தாலும் இது பற்றியே பேச்சு. போதாக்குறைக்கு சிறிலங்காவில் கூட அவர்களால் முடிந்தால் எம்மால் ஏன் முடியாது? என்கிற கேள்வி அதே சமயம் இறுகிய முகத்தோடு இசுரேலிய பிரதமர் றபின் வாசிங்டனில் அரபாத்தோடு கைகுலுக்க தயங்கியதும் கிளிங்டன் வலுக்கட்டாயமாக கைகுலுக்கச்செய்தாரா? என்கிற கேள்வியும் அண்மையில் 2-ம் தடவையாக அரபாத்தினை கெய்ரோவில் சந்தித்த றபின் வெளிப்படையாக மறுத்ததும் செய்தியாகசெருகப்பட்டு இசுரேலிய தரப்பின் இறுக்கமான தன்மையை வெளிப்படுத்தப்படும் விந்தையும் நடந்தது. ஆனால் அதே சமயம் உடன்பாட்டிற்கு எதிரான மக்களின் எதிர்ப்பு அணிகள், காசாப் பகுதியில் தொடரும் இசுரேலிய வன்முறைகள் முடிந்தளவு மறைக்கப்பட்டன.

**பாலகுமாரன்**

இவை எல்லாவற்றையும் விட நீண்ட காலமாக மறைக்கப்பட்டமோசமான தகவலொன்று இப்போது வெளியாகியுள்ளது அதுதான் இதுவரை காலமும் இசுரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இரகசியமாக இயங்கிவரும் கொலைக் குழுக்கள் பற்றிய செய்திகளாகும். இரகசியமாக இளம் பாலத்தீனியரை கொன்று குவிக்கும் இக் கொலைக் குழுக்கள் பற்றிய தகவல்கள் முடிந்தவரை அமெரிக்க தொலைத் தொடர்பு சாதன உரிமையாளர் உதவியோடு திட்டமிட்ட முறையில் இசுரவேலால் இதுவரை காலமும் மறைக்கப்பட்டது அதையும்மீறி அமெரிக்கநிருபர்களால்அனுப்பப்படும் செய்திகள் தலைப்புக்கள் மாற்றப்பட்டு பாலத்தீனிய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றே வெளிவரும். அல்லது செய்திகளை திசைதிருப்ப, தாக்கங்களைக் குறைக்கபாலத்தீனியரால்கொல்லப்படும் இசுரவேலியரின்சடலங்களையும் அவர்களின்பெற்றோர் உற்றோர் கண்ணீர்விடுவதையும் பெரிதுபடுத்தி வெளியிடுவர் அண்யையில் இக் கொலைக் குழுக்கள் பற்றிய தகவல்களைசேகரிக்கச் சென்ற பிரித்தானியப் பத்திரிகையாளர் சிலரின் அடையாள அட்டைகள் காணாமல் போயின யெருசலேம் வீதிகளில் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டனர் ஒருவரின் வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்ட சிறிய குண்டொன்று வெடித்தது. பாலத்தீனியர்போல் உருமறைப்புச் செய்து அவர்கள் பயன் படுத்தும் இலக்கங்கள் பொறித்த வாகனங்களில் வந்து பட்டப்பகலில் தமக்கெதிராக கிளர்ந்தெழும் - கல்லெறியும் சுவரொட்டிகள்ஒட்டும்- கேலிப் படங்கள் வரையும் இளம் பராயத்தினரைக்கொல்லும் இக் கொலைக் குழுக்கள் 1992ஆம் ஆண்டில் முதல் சில மாதங்களில் கொன்ற 29 பேரின் விபரங்கள் அண்மையில் வெளியாகின. ஆனால் இவை காலம் தாழ்த்திய தகவல்கள் ஏனென்றால் மேற்குலக தொடர்புச்சாதனங்கள் இப்போது இசுரேலிய முதலமைச்சரை அமைதியின் காவலனாககாண்பிக்கத் தொடங்கிவிட்டனர்.

இவற்றினை விட மேற்குலக தொடர்புச் சாதனங்களின் இரட்டை வேடம்அண்மையில் போலந்தில் ருஷ்யாவில் நடந்தேறிய முக்கிய நிகழ்வுகளின் போது அம்பலமாயின. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்புயல் போல வீசி ஓய்ந்த மாற்றங்களிற்கு முன்பாக - முன்னோடியாக பெருமாற்றங்கள் கண்ட நாடு போலந்து 2-ம் உலகப்போரின் பின் சோவியத்தின் ஆதரவு நாடாக்கப்பட்ட போலந்தில் 1980களில் பொருளாதார குழப்பங்கள் ஏற்பட்டதும் மேற்குலகம் தொடர்புச் சாதனங்களையும் கத்தோலிக்க திருச்சபையையும் வகையாக பயன்படுத்தி அழுத்தங்கள் கொடுத்து மாற்றங்கள் ஏற்படுத்தியதும் எவரும் மறக்கக் கூடியது அல்ல. போலந்தில் அமைந்திருந்த சோவியத் சார்பு ஆட்சிக்கு எதிராக (அவர்கள் விட்ட தவறுகளின் விளைவாக பொருளாதாரம் சிதைந்ததை பயன்படுத்தி, 1980களில் முதன் முதலாக சொலிடாரிட்டி (solidarity) எனப்படும் சுதந்திர தொழிற் சங்கமொன்றை இன்றைய போலந்தின் சனாதிபதியாக இருக்கும் அன்றைய கடான்ஸ்க் நகர லெனின் கப்பல் கட்டும் ஆலைத்தொழிலாளியாக இருந்த லெக் வலேசா உருவாக்கியதும் அவரது வேலை நிறுத்தங்களும் போலந்தை சேர்ந்த பரிசுத்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் போலந்து பற்றிய கவலை செய்திகளும் பெற்ற முக்கியத்துவம் ஒரு பக்கம்; அப்போது போலந்து அதிபராக இருந்த ஜெனரல் யாருசெல்ஸ்தி சொலிடாரிட்டியை அடக்க 1981ஆம் ஆண்டில் மேற்கொண்ட இராணுவ அடக்குமுறைகள் பெற்ற கண்டனம் ஒரு பக்கமுமாக மேற்குலக தொடர்பு சாதனங்கள் போலந்து தொடர்பாக ஒரு போரையே நடாத்தின இவ்வாறான மேற்குலக அழுத்தங்களாலும் சோவியத் உதவி குறைந்தாலும் போலந்து அப்பகுதியிலேயே முதன்முறையாக மேற்குலக சந்தைப் பொருளாதார முறைமைக்கு மாறியதும், உலக வங்கியில் அங்கத்துவம் பெற்றதும், சனநாயக வழிகளை பின்பற்றியதும் மிகப் பெரும் விளம்பரத்தை பெற்ற அப்போதைய செய்திகள் அதே போலவே தொழிலாளியாக இருந்து தொழிற் சங்கத் தலைவராகி நாட்டுத் தலைவராகும் அளவிற்கு நாயகனாக லெக் வலேசா உயர்த்தப்பட்டதும் வரலாறு ஆகும். சனாதிபதியாக வலேசா பதவி ஏற்றதும் சொலிடாரிட்டி அமைப்பிலிருந்து தோன்றிய ஆட்சி 1989 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று அரசு அமைத்ததும் அன்றைய அதி முக்கிய நிகழ்வுகளாக சித்திரிக்கப்பட்டன.

ஆனால் இன்று நடப்பதே வேறு மேற்குலகம் சொன்னபடி ஆடியபோதும் இவர்களால் போலந்தின் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியவில்லை விளைவு வலேசாவுக்கும் அவரது அரசிற்கும் எதிராக வலேசா உருவாக்கிய சொலிடாரிட்டி தொழிற்சங்கமே வேலை நிறுத்தங்களில் இப்போது ஈடுபடுகின்றது. வேதன உயர்வுகோருகின்றது இப்படியான ஒரு ஆபத்து நிகழ்வையும் போலந்து கண்டபின் இன்று இன்னொரு விந்தையும் அங்கு அரங்கேறி விட்டது. அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் போலந்து பொதுமக்கள் தமக்கு சீர்திருத்தங்களை சனநாயகத்தை சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்ததாக கருதப்பட்ட கட்சியை நிராகரித்து முன்னாள் பொதுவுடமையாளரால் பெயர்மாற்றப்பட்டு போட்டியிட்ட கட்சிக்கு பெரும் ஆதரவை வழங்கிவிட்டனர் 460 பேரைக் கொண்டகீழ்சபையில், 1/3பகுதிஆசனங்களைபொதுவுடமை வாதிகளால் உருவாக்கப்பட்ட SLDஎனப்படும் சனநாயக இடது சாரி கூட்டணிக் கட்சி பெற்றுள்ளது சொலிடாரிட்டி தொழிற்சங்க அமைப்பிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட கட்சியானது(U.D)எனப்படும் சனநாயக ஒன்றியக் கட்சி Democratie Union) படுதோல்வியடைந்துள்ளது இதனல் இப்போது சனாதிபதி வலேசா இடது சாரி கட்சியை அரசு அமைக்கஅழைக்கநேரிட்டு விட்டது. எனவே இப்போது போலந்தில் புதிய கூட்டரசை அமைக்கப் போகும் சனநாயக இடது கூட்டணியும் போலந்து விவசாயக் கட்சியும்முன்னைய கம்யூனிச அமைப்பைச் சேர்ந்தவர் என்பதை உலகிற்குஅறிவிக்க மேற்குலக தொடர்பு சாதனங்கள் பெருமளவு முன்வரவில்லை ஏற்கனவே லிதுவேனியாவிலும் விரைவிலே தேர்தல் நடைபெறவிருக்கும் கங்கேரியிலும் பெயர் மாற்றப்பட்டு படிப்படியான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவிரும்பும் முன்னாள் பொதுவுடமைக் கட்சிகள் மீண்டும் செல்வாக்குப் பெறுவது பெறுமதியற்ற பரபரப்பற்ற செய்தியாகவே தரப்படுகின்றது ''பொதுவுடைமைவாதம் செத்திருக்கலாம்ஆனால்பொதுவுடைமை வாதிகள் சாகவில்லை''

என வருணிக்கப்படும் இந்நிலை மேற்குலகால் சீரணிக்கப்பட முடியாதது என்பதே இதன் மறை பொருளாகும்.

இம் மாதிரியாக நூற்றுக்கணக்கான சான்றுகள் காட்டப்பட முடியும் அண்மையில் ருஷ்யாவில் டாங்கிகளால் நாடாளுமன்றை தகர்த்து சபாநாயக, உபசனாதிபதியை தடை செய்த செய்தி தணிக்கைகொண்டுவிட்டு இராணுவச் சட்டத்தை பிறப்பித்து சனநாயகத்தின் வெற்றியை குறிப்பதாகவும் யெல்சினே தலைசிறந்த சனநாயகவாதி என நிரூபிப்பதாகவும் அமையும் என மக்களுக்கு பறைசாத்தப்படும் தென்கொரியாவில் பலநூற்றுக் கணக்கில் உயிரை இழந்து அமெரிக்க சார்பான அரசுக்கு எதிராக பெரும் போராட்டம் நடாத்திய மாணவர் போராட்டம் சிறுமைப்படுத்தப்படும் அதே சமயம் சீனாவின் தியெமன் சதுக்க மாணவர் படுகொலைகள் 1989-ல் இருந்து இன்று வரை தொடர்ந்து முக்கியம் கொடுக்கப்படும் இது சீனாவிற்கான மேற்குலக அழுத்தம் வர்த்தகப் போட்டியில் முன்னணியில் நிற்கும் யப்பானை இழிவுபடுத்த யப்பான் 2 ம் உலகப் போரில் செய்த கொடுமைகள், இந்தோசீனப் பெண்களை யப்பானிய வீரர் நிர்ப்பந்தமாக தமக்கு வசதிப்பெண்டிர் ஆக்கியமைகிளறப்படும் (யப்பான் செய்தது மா பெரும் கொடுமை என்பது வேறு விடயம்) ஆனால் அதே சமயம் பிலிப்பைன்சில் அமெரிக்கத் தளம் இருந்த போது ஏழைப் பிலிப்பைன்ஸ் பெண்களை ஆயிரக்கணக்கில் தமது தற்காலிக மனைவியர் ஆக்கி குடும்பம் வருடக்கணக்கில் நடாத்திய பின் பிள்ளைகள் பெற்றபின் எல்லோரையும் கைவிட்டு சென்ற அமெரிக்கப் போர் வீரர் நடத்தை பற்றி மௌனம் சாதிக்கப்படும் இவ் இரட்டைவேட தொடர்பு சாதன உரிமையாளர்கள் இன்று அநாதைகளாக அமையும் 50,000 இற்கு மேற்பட்ட அமெரிக்க ஆசியர் என புது வகை இனமாக தோற்றம் பெறும் குழந்தைகள் பற்றி கவலைப்பட்டார். Amcrasian எனப்படும் இக் குழந்தைகள் சார்பாக மனிதாபிமான அமைப்புக்கள் அமெரிக்காவில் நடாத்தும் வழக்கு மூலமே இச் செய்தி பகிரங்கமாகியது. இவ்வாறாக உதாரணங்கள் நீளும்.

எனவே இன்றைய நாளில் மக்களை நவீன அடிமைகளாக்கும் இப்புதிய போர் புதுவகையானது ஆனால் ஆபத்தானது ஏனென்றால் இத்தகைய கருத்து ஆதிக்கம் என்பது எப்பொழுதிலும் மெய்ப்பொருள் காண்பதை மிக்க கடினமாக்கி விடும்

## வீரனே விரைந்தோடி வா!

படை கொண்டு எமை உண்டு
பசியாற நினைக்கின்ற
பாதகர் செயல் ஏற்பதா?
பாடையில் போகினும்
பணியாது எதிர் நின்று
பைந்தமிழ் நிலம் காப்பதா?

இளமாதர் உடல் பற்றி
இரை மீட்கத் துடிக்கின்ற
இரணியர் வெறி ஏற்பதா!
களமாடிக் கைமுனு
காடையர் தமை வென்று
கன்னியர் நெறி காப்பதா?

தடையென்று பல செய்து
தருவதைச் சிரமேற்றுத்
தமிழ் மண்ணை நாம் இழக்கவா?
அட போடா! உரிமைகள்
அதை நாமே எடுப்பமென்(று)
அணியாகப் படை சேர்வதா?

திடமோடு களம் சென்று
தீயவர் தலை கொய்து
தீந்தமிழ் நிலம் காப்பம் வா!
விடை யொன்று தமிழீழம்
விரைவாகும் வினா ஓயும்
வீரன் நீ விரைந்தோடி வா!

-- நெலன்

# இயற்கை நாசங்களில் ஒன்று பூமிநடுக்கம்

புவிநடுக்கம் (Earth quake) புவியதிர்வு, பூமியதிர்ச்சி என்பன ஒரு செயலைக் குறிக்கும் பல சொற்கள். இந்த புவி நடுக்கம் ஏன், எப்படி, எங்கு ஏற்படுகிறது? இந்தியாவில் மகாராஷ்டிரத்தில், சாஸ்தூர் கிராமத்தில் ஏற்பட்ட ஓந்த நிகழ்வின் பின் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் இதனைப் பற்றியே கவனம் செலுத்துகின்றன. ஆயினும் அனைவரும் இதனை விளங்கிக் கொள்ள அக்கறை காட்டுவதில்லை.

புவியின் அமைப்பு, உட்பாகம் பற்றிய விளக்கம் இதற்கு அவசியமானதாகும். மேற்பரப்பில் இருந்து உள் நோக்கிச் செல்லச் செல்ல வெப்பம்அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இந்த அடிப்படையிலும் படைகள் கொண்டுள்ள கனிப்பொருள்கள் அடிப்படையிலும் முக்கிய நான்கு படைகளை புவியின் உட்பாகம் கொண்டுள்ளது. மேற்பரப்புப் படை மேலேயுள்ள சீயல் படை எனப்படும். இது 60 கிமீ தடிப்புடையது. அதற்கடுத்த உள் நோக்கிய படை உள்சிலிக்கேற் படை ஆகும். இதனுடைய பெரும்பகுதி சிலிக்கேற்றையும் மக்னீசியத்தையும் கொண்டிருக்கும். இதனைப் Siusa படை என்றும் கூறுவார்கள். இது 1140 கிமீ தடிப்புடையது. மூன்றாவது படை மையப்படை (Core) எனப்படும். இது பல உலோகங்களின் சேர்க்கையாலும் சிலிக்கேற்றினதும் கலப்பு ஆகும். இது கழி நிலையில் தான் இருக்கும். 1700 கிமீ தடிப்புடையது. நான்காவது புவியின் நடுப்பகுதி உள்மையம் (Inner Core) எனப்படும். இரும்பு, நிக்கல் போன்ற பல உலோகக் கலப்புடையது. மிக வெப்பமானது. திரவ நிலையில் காணப்படும் காந்த சக்தியுடையது. பொதுவாக புவியின் உட்பகுதிக்கு ஏற்ற முறையில் அதற்கடுத்தபடை அமையும் விரியும் இதேபோல siusa படையும் கழி நிலையிலும் திட நிலையிலும் அமையும். வெப்பம் அதிகமாகி சீமா படை கழி நிலையில் இருக்கும்போது மேற்பரப்பின் திடமான படை அங்கும் இங்கும் இழுத்துச் செல்லப்படும்.

புவியின் மேற்படை உறுதியான தொல்காலப் பாறைகளைக் கொண்ட தொகுதி

உள்ளதாலும் புவிச்சரித காலத்தில் நிகழ்ந்துள்ளன. நிகழ்ந்தும்வருகின்றன. சீமாப் படை வெப்பம் ஊட்டப்படுவதும் அதனால் அப்படை திரவமாவதும்மேற்கூறியநிகழ்வுகளுக்குக் காரணமாகின்றன. வெப்பம் ஊட்டப்பட்ட சீமாப்படையில் மேற்காவுகை ஓட்டங்கள் பெயர்ச்சி ஓட்டங்கள், கிடையான ஓட்டங்கள் நிகழும். இவ்வாறு நிகழும் போது மேற் பரப்புதட்டுகள் அங்கும் இங்கும் இழுத்துச் செல்லப்படும். ஒன்றுடன்

- 1201ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிழக்கு மத்தியதரைப் பகுதியில் நிகழ்ந்த பூகம்பத்தில் 11 இலட்சம் பேர் மாண்டனர்.
- 1956 பெப்ரவரி 2ஆம் திகதி சீனாவின் ஷன்சி மாகாணத்தை பூகம்பம் தாக்கியதில் 8 இலட்சத்து 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்
- 1737 ஆக்டோபர் 11 கல்கத்தா பூகம்பத்தில் மூன்று இலட்சம பேர் பலியாகினர்.
- 1976 ஜூலை 27 சீனாவின் தங்ஷான் மாகாணத்தைத் தாக்கிய பூகம்பத்தால் 2 இலட்சத்து 42 ஆயிரம் பேர் பலியாகினர்.
- 1920 டிசெம்பர் 16இல் சீனாவின் கன்சு மாகாணத்தில் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேர் பலியாகினர்
- ஜப்பானின் கன்டோ சமவெளியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 1923 செப்டெம்பர் 1இல் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

ஒன்று மோதும். பிளவுக்கு உட்படும். உயர்த்துகை தாழ்த்துகைக்கு உட்படும் இவை வேகமாகவும் மிகமெதுவாகவும் நடைபெறும் வேகமாக நிகழும் போது அது கண்டப் பெயர்ச்சி, புதிய நிலத்தோற்றங்களை உண்டாக்கும். மெதுவாக நடக்கும் போது புவி நடுக்கம் அந்த வழியில் எரிமலை நிகழுகின்றன. மேற்படி நிகழ்வுகளுக்கு காரணமான ஓட்டங்கள் தட்டு ஓட்டங்கள் (plate tectonics) எனப்படும். இதனை ஆராய்கின்ற கொள்கைகளை - plate tectonics Theories என்பர்.

இந்த தட்டுக்கள் இணைந்ததே புவியின் மேல்படை இவை இணையும் ஓரங்கள் சிறு ஒடுங்கிய நீண்ட எல்லைப் பகுதியைக் கொண்டிருக்கும். புவிச்சரித உலகப் படத்தைப் பார்க்கும் போது இந்த தட்டுகள் இணையும் வெட்டுண்ட சமுத்திர ஆழி ஓரங்கள் பெருமலைத் தொடராகவோ அல்லது ஆழ

திக்கு ஊடாகவும் செல்லக் கூடியவை. S அலைகள், நடுத்தர அலைகள் ஆகும். புவியினுட் பகுதிக்கு இவை போகா. L அலைகள் மேற்பரப்பு அலைகளாகும். இவை கிடையான அலைகள் ஆகும் பாறைகளில் அடர்த்திக்கு ஏற்ப அவற்றின் வேகம் தடைப்படும்.

பெரும்பாலான புவி நடுக்கப் பகுதிகளை நோக்கும் போது முற்கூறிய தட்டுகளின் ஓரங்களை அண்மித்த பகுதிகளாக இருக்கின்றன. ஓரங்

களில் தாக்கம் அண்மித்த பகுதிகளிலேயே வெளிப்படுகின்றது. அலூசியன் சமுத்திர ஆழிப்பகுதி; குறையில் சமுத்

இந்த தொடரை அண்மித்த பகுதிகள் புவிநடுக்கப் பகுதிகளாகும். தென்கிழக்காசியப் பகுதியும் ஒரு புவிநடுக்கப் பகுதியாகும். இங்கு சிறு தட்டுகளை பிலிப்பைன்ஸ் தட்டு, பிஸ்மார்க் தட்டு, ஜாவா ஆழி ஆகியன பெரிய தட்டுகளின் ஓரங்களுடன் அதாவது அவுஸ்ரேலிய, யூரேசிய, பசிபிக் தட்டுகளுள்இணையும் பகுதிகளாக இருக்கின்றன இவையும்புவிநடுக்கபகுதிகளாகும், மொரக்ரோவில் இருந்து பர்மா வரை எடுத்துக்கொண்டால் ஒன்றுக்கு மேற்பட்ட பல தட்டுகள் பொருந்தும் ஓரங்களாக இருக்கின்றன. ஆபிரிக்கத்தட்டு, இந்தியத் தட்டு, அவுஸ்திரேலிய தட்டு என்பவை யூரேசியத்தட்டுடன் பொருந்தும் ஓரங்களாகும். இவற்றுக்குள் சிறு தட்டுகளான எதிரியாட்டித் தட்டு, துருக்கித்தட்டு, ஈரான்தட்டு, இந்தியத் தட்டு ஆகியனவும் அமைந்திருக்கின்றன. இதனால் இந்த ஓரங்களை அண்மித்த பகுதிகள் மொரக்கோ, இத்தாலி, கிரேக்கம், துருக்கி, ஈராக், ஈரான், திபேத், பர்மா என்ற வரிசையில் புவிநடுக்கப் பகுதிகள் அமைந்துள்ளன. இந்த தொடர்பு ஜாவா, சுமாத்திரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ் எனப்போகிறது. இவ்வாறு பல உதாரணங்களைக் காட்டலாம்.

இன்றைய அறிவியலின்படி, புவிநடுக்கத்தொடர்பு முற்கூறியது போன்று பிளவுக்கு

லைகள் தோன்றி பின் தோன்றாமல் அணைந்த பகுதிகள். இடைப்பட்டவை. 70 - 300 கி. மீ. ஆழம் உடையவை. (உதாரணம் கலிபோர்னிய சென்ற். பன்ரூஸ், துருக்கி அனற்றோலிய பிளவுகள் பிளவுகளின் ஆழத்துக்கு ஏற்ப இத்தகைய புவி நடுக்கம் வேறுபடும். 3. சமுத்திரங்களின் ஆழிகளுடனும், எரிமலைத் தீவுக் கூட்டங்களுடனும் தொடர்புடையன ஆழமான புவிநடுக்கமும் நடுத்தரமான புவிநடுக்கமும் இங்கு ஏற்படலாம் ஆழமானவை 300-700 கி.மீ ஆழமுடையன. (உதாரணம் பசிபிக் சமுத்திரம்) 4. பர்மாவில் இருந்து மத்தியதரைக் கடல்வரையும் உள்ள புவிநடுக்கப் பகுதி. சாதாரணமானவை பெரிய மலைத்தொடர்களுடன் சேர்ந்துள்ள பகுதிகளிலே இங்கு புவி நடுக்கம் ஏற்படும். புவியினுடைய சுற்றுகை கராமணாகவும் சில தட்டுக்கள் சுழலும் போது வேகமாக இடம் மாற்றப் படலாம் அல்லது வேறொரு தட்டு அந்த இடத்திற்கு மாற்றப்படலாம். ஒரே சுழற்சி அச்சு நிலையில் இது நிகழக் கூடியது எனக் கூறப்படுகிறது சிறு அளவிலான புவிநடுக்கம் அணுக்குண்டுப் பரிசீலனை, பெற்றோலிய வள ஆய்வுகள், பெரும் நீர்ப்பாசனத் தேக்கங்கள் ஆகியவற்றினால் அவற்றிற் பிறக்

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**

தலைவர், புவியியல்துறை யாழ். பல்கலைக்கழகம்



கடந்த 29ஆம் திகதி அதிகாலை 3. 56 மணிககு மகராஷ்டிரா மாநிலத்தில் பெரும் அழிவை ஏற்படுத்திய பூகம்பம் கர்நாடகா ஆந்திர பிரதேசங்களிலும் உணரப்பட்டது. 30 ஆயிரம் பேரைப் பலிகொண்ட இப் பூகம்பத்தில் மகராஷ்டிராவின் உம்பர்சா நகரில் மட்டும் 3000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் கிலாரி நகரில் 1500 பேர் கொல்லப்பட்டனர் 50 கிராமங்கள் அடியோடு அழிந்தன

களைக் கொண்டது இவற்றைத் தட்டுக்கள் (plates) என அழைப்பர். பசிபிக் தட்டு யூரேசியத்தட்டு, வடஅமெரிக்கத்தட்டு, தென்னமெரிக்கத் தட்டு, ஆபிரிக்கத்தட்டு, இந்தியத்தட்டு, அன்ராட்டிக்காத் தட்டு, நஸ்காதட்டு, ஈராக்கியத்தட்டு, அரேபியத்தட்டு கருபியத்தட்டு, அவுஸ்திரேலியத்தட்டு என்னும் முக்கிய தட்டுகளாலும் சிறு தட்டுகளாலும் மேற்பரப்புப் படை நிரப்பப்பட்டுள்ளது. இவற்றுள் பெரும்பாலனவை கண்டங்களாகவும் சில சமுத்திரங்களாகவும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவை சீயல் படையைச் சேர்ந்தவை. இவற்றின் அடியில் சீமா படை அமைந்துள்ளது.

இந்த தட்டுக்கள் புவி வரலாற்றுக்காலம் முழுவதும் இன்றுபோல இருக்கவில்லை. இன்றுள்ள கண்டங்கள் அதேயிடத்தில் இருக்கவில்லை. அவை இடம்மாறின. இதனை கண்டப்பெயர்ச்சி (Condindal Drift) எனப்படும். இந்த தட்டுக்கள் இடம்மாறுதலும் தாழ்த்தப்படலும் உயர்த்தபடலும் மோதுப்படலும் பிரிவுக்கு

மாகவோ இருப்பதை அவதானிக்கலாம். பொதுவாக தட்டுகள் இணையும் ஓரங்கள் உறுதியற்ற பகுதிகளைக் கொண்டிருக்கும். இங்கு இந்தத் தட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று உராயும் போது அல்லது மோதும் போது அங்கு பெரும் சக்தி(Energy) வெளிப்படும். இந்த சக்தி தட்டுகளுக்கு ஊடாகவும் செங்குத்தாக உட்படைகளுக்கு ஊடாகவும் பாயும். எங்கு வசதியான ஊடறுக்கக் கூடிய படைவிலகல் இருக்கின்றதோ அங்கெல்லாம் இதன் பாய்வு இருக்கும். இதனை புவி நடுக்க அலைகள் எனப்படும். எங்கு சக்தி வெளியேற்றம் ஏற்படுகின்றதோ அது குவியம் (Focus) ஆகும். புவிக்கோளத்தில் இந்த குவியம் ஏற்பட்ட இடத்திற்குநேரெதிராகஅலை பதியப்பட்டால் மேல் மையம் (Epicenter) எனப்படும். சில புவி நடுக்க அலைகள் உலகம் முழுவதும் அவதானிக்கப்படலாம். இந்த அலைகளில் வேகத்துக்கு ஏற்ப p, S, L அலைகள் என வேறுபாடு உண்டு. p அலைகள் வேகமானவை. கிடையாகவும் செங்குத்தாகவும், புவியினுட் பகு

திர ஆழிப் பகுதி; யப்பான், மரியானா ஆழிப்பகுதி, அவுஸ்திரேலியாவுக்கு கிழக்கில் உள்ள சமுத்திர ஆழிப்பகுதி ஆகியன பசிபிக் தட்டும் யூரேசியத் தட்டும், அவுஸ்திரேலியத்தட்டும் இணையும் ஓரங்களாகும். இதேபோல பசிபிக் தட்டு அமெரிக்கத்தட்டுகளுடன் இணையும் ஓரம் பெரும் மலைத்தொடராக இருக்கின்றது. மேற்கூறிய இணையும் பகுதிகளை அண்மித்த பகுதிகள் முக்கிய புவி நடுக்கப் பகுதிகளாக அமைந்துள்ளன. மேலும் அத்திலந்திக் சமுத்திரப் பகுதியை எடுத்துக் கொண்டால் அது அமெரிக்கத்தட்டுகளும் ஆபிரிக்க, யூரேசியத் தட்டுகளும் இணைந்த பரப்பில் காணப்படுகிறது. இந்த மேற்கு கிழக்குத் தட்டுகள் இணையும் ஓரம் அத்திலந்திக் சமுத்திரத்தின் மத்தியில் வடக்குத் தெற்காக தட்டுகளின் போக்கு ஏற்ற ஒரு தொடரைக் கொண்டுள்ளது.

உட்பட்ட பள்ளத்தாக்குகள் சமுத்திர ஆழிகள், சமுத்திரங்களுக்கு அடியில் காணப்படும் தொடர்கள். மலைத்தொடர்கள், எரிமலைப் படுக்கைகள் ஆகியவற்றுக்கு இடையில் காணப்படுகிறது. ஆயினும் இந்த ஓரங்களில் புவிநடுக்கம் ஏற்பட்டாலும் அதன் தாக்கம் சற்று அண்மித்த பகுதிகளில் தான் ஏற்படுகிறது. இவ்வாறு பார்க்கும் போது நான்குவகையான புவிநடுக்க வலயங்களை அடையாளம் செய்யலாம். 1. மேற்பரப்பு வெப்பம் மூட்டப்படும் பாகங்களான எரிமலைப் பகுதிகளும் சமுத்திரங்களில் காணப்படும் தொடர்களுடனும் இணைந்தால் இங்கு ஏற்படும் புவி நடுக்கங்கள் ஆழமற்றவை 70 கி.மீ வரை ஆழமுடையவை. (உதாரணம் மத்திய அந்திலாந்திக்தொடர். 2 எரிம

கும் விசையால் (Retarding-Force) தோன்றலாம் மகாராஸ்டிர புவிநடுக்கம் ஒன்றில் இந்தியத்தட்டு வடக்கு நோக்கி அசைந்ததால் ஏற்பட்டிருக்கலாம் அல்லது எரிமலை இணைந்த பகுதியாக இருப்பதால் வெற்றுஇடம் நிரப்பப்பட்டிருக்கலாம். அல்லது முற்கூறிய பிறகிடும் விசையாலும் தோன்றியிருக்கலாம்.

புவிநடுக்க இயல் **Seisnology** என்றும் பதிவிடும் கருவி **Seisnogram** என்றும் பதியப்படும் கோடு **Seisnograph** என்றும் கூறப்படும் முதலாவதாக யப்பானில் வீசப்பட்டஅணுக்குண்டினைப் போல் 3 மில்லியன் மடங்கு கொண்ட புவி நடுக்கங்களும் இந்த நூற்றாடில் ஏற்பட்டிருக்கின்றன.

# கண்ணன் காட்டும் வழி

சிறுகதை

முருகு

முருகேசன் சவூதிக்கு வந்து மூன்றரை ஆண்டுகளாகிவிட்டன. உழைக்கும்ஆசையில் - தேவையில் - ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொண்டு அவன் இங்கேயே தங்கிவிட்டான். ஊரில் இருக்கின்ற உறவுகளிடமிருந்து தினம் தினம் பலவிதச் செய்திகளைத் தாங்கிய வண்ணம் முருகேசனுக்குக் கடிதங்கள் வரும். அவற்றில் உறவினர்களிடையே நிகழும் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, புதுமனைப் புகுவிழா என்பன போன்ற இன்பமும், துன்பமும் கலந்த செய்திகள் வரும். அவற்றையெல்லாம் வாசித்து ஏற்று ஜீரணித்துக் கொள்ளும் அவனுக்கு, போராளிகளுடன் கண்ணன் கூடித்திரிகின்றான் என்று கமலா முன்பு ஒரு தடவை தனக்கு எழுதிய கடிதத்தில் எழுதி இருந்தமை அவனது நினைவுக்கு வருகின்ற போதிலும், கமலாவின் கடிதங்களில் அடிக்கடி கண்ணன் பற்றிய முறைப்பாடுகளில் இருந்து கண்ணன் இப்படிச் செய்யவும் கூடும் என்று முருகேசன் ஓரளவு எதிர்பார்த்திருந்த போதிலும், கமலாவின் முறைப்பாடுகள் பற்றி கண்ணனுக்குச் சாடைமாடையாக முருகேசன் ஒரு தடவை கடிதத்தில் எழுதிய போது அதற்கு கண்ணன் ''அப்பா! முதலில் அறிவை வளர்ப்பதா? அல்லது அழிவைத் தடுப்பதா? இதில் எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்பது பற்றித் தீர்மானம் எடுக்க வேண்டிய அவசர - அவசிய - நிலைமையில் தான் இங்கு தமிழ் மாணவ சமுதாயம் இருக்கின்றது. இங்குள்ள எமது நிலைமையைக் கடிதங்களில் எழுதி விளக்கிவிட முடியாது'' எனக்குறிப்பிட்டிருந்தமை அவனது நினைவுக்கு வருகின்ற போதிலும், இன்று அவனுக்கு வந்த கடிதம் தாங்கி வந்த செய்தியை அவனால் ஜீரணித்துக் கொள்ள இயலாமற்தான் உள்ளது. வந்த செய்தி பிழையானதாக இருக்க இடமில்லை. ஏனெனில் செய்தியைத் தந்திருப்பது அவனது துணைவியான கமலாதான்! எனவே செய்தி சரியானதே. ஆனால் அந்தச் செய்தியை ஜீரணித்துக் கொள்ளுவது தான் முருகேசனுக்கு...?

முன்னர் ஒரு தடவை அவனது மனைவி கமலா எழுதி இருந்த கடிதத்தில் ''இங்கு திடீர்த்திடீரென ஆண் பெண் என்று பேதம் இல்லாது வயது வித்தியாசம் பாராது போராட்டத்தில் இணைந்து கொள்ளப் பள்ளிக் கூடப் பிள்ளைகள் புறப்பட்டுப் போகின்றார்கள். இவர்கள் போகும் வரை எவருக்கும் சொல்லிப்போவதுமில்லை. அவர்களில் உள்ளவன் வீட்டுப்பிள்ளை, இல்லாதவன் வீட்டுப் பிள்ளை, படித்தவனின் பிள்ளை பாமரனின் பிள்ளை என்ற பேதமும் இல்லை. அவர்களுக்குக் கல்வியைப் பற்றிக் கவலை இல்லை யாராவது கேட்டால் அடிமைக்கு என்ன படிப்பு என்று கேட்பவரைக் கேட்கின்றார்கள். பெற்றோர் இவர்கள் இருக்குமிடத்தை ஒருவாறு தேடிப்பிடித்துப் போய்க் கூப்பிட்டால் ''நீங்கள் போய் வீட்டில் இருங்கோ. நாங்கள் வர வேண்டிய நேரம் வந்து சேருவோம்'' என்று பதில் கூறி அனுப்புகிறார்கள். ''ஏன் இப்படியெல்லாப் செய்கின்றீர்கள்'' என்று கேட்டால் ''நீங்கள் சரியாகச் செய்திருந்தால் நாங்கள் இப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டிய நிலை வந்திருக்காது'' என்று பதில் கூறுகின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போதும் கேட்கும் போதும் எங்கள் கண்ணனைப் பற்றி நினைக்கப்புயமாகவும் கவலையாகவும் இருக்கின்றது. அவனின் பேச்சும் போக்கும் இடை இடையே வித்தியாசமானதாக உள்ளது. என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை. நீங்கள் இங்கு இருந்தாலாவது எனக்குத் துணிவாக இருக்கும் ''என்று எழுதி இருந்தமை அவனது நினைவுத் திரையில் பளிச்சிட்டு மறைந்தது. அத்துடன் கமலாவின் அச்சத்தைத் தணிக்கும் நோக்கத்தில் அவளது கடிதத்திற்குப் பதில் எழுதும் போது'' எது நடந்தாலும் கவலைப் படாதே, கமலா! ஏதோ நடப்பதுதான் நடக்க வேண்டியதுதான்-நடக்கும். வீட்டுக்கு வீடுஅவ்விதம் நடக்கும் போது எமது வீட்டில் அப்படி நடந்தால் அது புதினமும் இல்லை. அதனைத் தடுக்கவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது. கண்ணனின் எண்ணம் அப்படிப் போனால் யார்தான் என்ன செய்ய முடியும்? எங்கள் இளைஞர்களின் இப்போக்கிற்கு ஆட்சியைத்தான் குறைசொல்ல வேண்டும்'' என்றுதான் எழுதி இருந்தமை நினைவுக்கு வரவே, கமலாவின் கடிதத்தை மீண்டும் ஒரு தரம் வாசித்துப் பார்க்கக் கையில் எடுத்தான்!

''...கண்ணனுடன் கூடித்திரியும் அவனது சிநேகிதர்களிடம் உள்ளதைப் போல ஒரு புதுச் சைக்கிளை, உங்களுடைய அனுமதியுடன், வாங்கிக் கொடுத்த போது அவன் ''ஏனம்மா, அப்பாவின் சைக்கிள் இருக்குதுதானே! புதுசு இப்போது ஏனம்மா?'' என்று கேட்டான். ''அது அப்பாவின் பழைய சைக்கிள். அது இருக்கட்டும். உனக்கென்று ஒரு சைக்கிள் இருக்கட்டுமே'' என்று கூறி அவனைச் சமாளித்தேன்.

சில மாதங்களின் பின்னர் அவனது பிறந்த திகதிக்குரிய கல்லு வைத்து ஒரு மோதிரம் செய்வித்து அவனது பிறந்த தினத்தன்று அவனுடைய விரலில் போட்ட போது ''இது ஏன் அம்மா? நான் கேட்டேனா அம்மா? ''என்று முணுமுணுத்தான். 'ஏனோ? உனது பிறந்த திகதிக்குரிய கல்லு வைத்த மோதிரம் போட்டிருப்பது நல்லதென்று எல்லோரும் சொல்லுகின்றார்கள். உனக்கு நல்லதென்று நான் செய்வித்துத் தர, நீஏனென்றுகேக்கிறாய் என்று கேட்டதும் அவன்மௌனமாகி விட்டான்.

கடந்த தைப்பொங்கலுக்கு முதல் நாள் அவனுக்கொரு சங்கிலி செய்வித்துக்கொடுத்தபோது ''எனக்கேனம்மா சங்கிலி? நீங்கள் அல்லவோ போட்டிருக்க வேண்டும்? ''என்றான். அதற்கு ''உன்னோடு சேர்ந்த சிநேகிதப்பொடியள் எல்லோரும் சங்கிலி போட்டுக் கொண்டு திரியும் போது நீமட்டும் வெறுங்கழுத்தோடுஒன்றுக்கும் வழியில்லாதவன் போலப்போவது சரியில்லைத்தானே, கண்ணா? உன்னையும் அவன்கள் ஒருமாதிரித்தானே நினைப்பாங்கள்'' என்று கூறியதும் அவன் சிறிது நேரம் சிந்தித்தான், பின்புஅவன் சங்கிலியை ஏற்றுக்கொண்டான்.

அவனிடம் நான் படிப்பைப் பற்றி அதிகமாக எதுவும் கேட்பதில்லை. பள்ளிக் கூடம், ரியூசன் என்பனவற்றுக்கு ஒழுங்காகப் போய் வருவான். வீட்டு வேலைகளையும் ஒழுங்காகச் செய்வான். பொழுது பட்டதும் படிப்பான். தானுண்டு தன்படிப்புண்டுஎன்று இருந்தாலும் சிநேகிதருடன் உலாத்துவதும் உண்டு. கனகாலத்திற்குப் பிறகு கடந்த கிழமை மத்தியானம் சாப்பிட்டு விட்டு எல்லாரும் ஹோலில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த போது ''கண்ணா'' அடுத்த வருடம் தங்கைச்சி கண்ணம்மா ஒ.எல். எழுதப் போறாள். அதனாலே அவளுக்கு முன்னமேயே-இந்த வருடத்திலேயே ஓ.எல்.ஐப் பாஸ் பண்ணிப் போடு, விளங்குதோ'?- என்று. கதையோடு கதையாகக் கூறியபோது ''ஓமோமம்மா! கட்டாயம்'' என்று மட்டுமே கூறிவிட்டுத்தன்பாட்டில் எழுந்துபோய் விட்டான்.

கடத்த வாரம் -அவன் வீட்டை விட்டுப் போவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு என நினைக்கிறேன்- இரவு நானும் கண்ணனும் கண்ணம்மாவும் கடைக்குட்டி ஈஸனுமாகக் கூடி இருந்து வழமை போன்று சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது''அம்மா! எங்களின்ரை அப்பாவைப் போல எத்தனை எத்தனை அப்பாமார் தங்களுடைய பிள்ளைகளை இங்கே தவிக்க விட்டு விட்டுத் தொழில் செய்து தங்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்காகச் சவுதியிலும் குவைத்திலும் ஒமானிலும் போய்க்கிடந்து உழல்கின்றார்கள்? இந்தச் சிறிலங்காவின் அநியாயங்களினாலேயே இப்படிப்பட்ட சீரழிவுகளெல்லாம்? எனவே வெளிநாடுகளில் கிடந்து வேதனைப்பட்டு - அந்நியரின் மொழியை ஏற்று - அவனது கலை பண்பாடுகளைச் சகித்து - செய்ய விரும்பாத, இது வரை செய்யாத தொழில்களையும் பணத்துக்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு செய்து, உடலாலும் உள்ளத்தாலும் நலிவடைகின்ற ஆயிரம் ஆயிரம் அப்பாமாரும் எங்கள் மண்ணுக்குத் திரும்பி வருவதற்கு, இன்று எங்கள் மண்ணை ஆக்கிரமித்து நின்று அநியாயங்களையும் அழிப்புகளையும் செய்கின்ற சிறிலங்காவை ஓட ஓட அடித்து விரட்ட வேண்டும். இந்தத் தமிழ் மண்ணை அவனிடமிருந்து மீட்டெடுத்துச் சுதந்திர மண்ணாக்கினால்தான் எங்களுடைய அப்பாமாரெல்லாம் வந்து ஏதோ ஒரு தொழிலைச் செய்து கொண்டு தன்மானத்தோடு சந்தோசமாக எங்களோடு இருப்பார்கள்'' என்று சொன்னான். ஒருநாளும் இப்படி அவன் என்னுடன் கதைத்ததில்லை. அன்றிரவு அப்படிக்கதைத்தது எனக்கு ஒரு விதமாகப் போய் விட்டது கண்ணனின் கதையைக் கேட்டதும் கண்ணம்மாவும் ஈஸனும் ஆளை ஆள் மாறி மாறிப் பார்த்தார்கள் உடன் என்னுடைய முகத்தையும் இருவரும் பாாத்தார்கள். நான் என்னை ஒருவிதமாகச் சமாளித்துக் கொண்டு ''அதுநல்லதுதானே, தம்பி! அதை விட்டுவிட்டு நீங்கள் எல்லாரும் கெதியாகச்சாப்பிடுங்கோ. மண்ணெண்ணை விற்கும் விலைக்குக் கனநேரம் விளக்கு எரிக்க ஏலாது'' என்று கூறிக் கண்ணனின் கதைத் திசையை மாற்ற முயன்றேன். சிறிது நேரம் கழிந்த பின்பு அவன் மீண்டும் ''நான் சொல்வது சரிதானே அம்மா?'' என்று கேட்டான். அதற்கு நான் ''உனக்கேன் தம்பி, அந்தக் கவலை? அதுக்கென்று ஆட்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அதைச்செய்வார்கள்தானே, தம்பி! நீ சாப்பிடு' என்றேன். உடனே ''தமிழனின் குணம் அதுதானே! யாராவது பாடுபடட்டும்; பயன் வரும் போது எனக்கும் வரும்தானே! நான் ஏன் பாடுபடவேண்டும்? என நினைப்பதுதானே எங்களுடைய இனத்தின் தனித்தன்மை'' என்று கூறினான்! அப்படி என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று நீ நினைக்கின்றாய் தம்பி? என்று கேட்டேன் உடனே அவன் ''எங்களைப் போன்றவர்கள் இணைந்து மண்மீட்கப் போராட வேண்டும். எங்களின் அப்பா மீண்டும் இங்கு வருவதற்காக நாங்கள்தானே போராடவேண்டும்; இல்லையே அம்மா?'' என்று கேட்டபடியே சாப்பிட்டு முடிந்த தட்டையும் எடுத்துக் கொண்டு அவன் வெளியே போய்விட்டான். அந்தக்கதை அத்துடன் முடிந்துவிட்டது. அதன்பின்பு அவனோ நானோ அதுபற்றிக் கதைக்கவில்லை, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை என எண்ணுகின்றேன். காலைநேரம் பிள்ளைகள் மூவரும் பாடசாலைக்குப் போய்விட்டார்கள். மதிய உணவுக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்ய எண்ணி அடுப்படிக்குப்போகஎண்ணிக் கொண்டு காலடி எடுத்து வைத்தபோது படலையில் தபாற்காரனின் சைக்கிள் மணி கேட்டுப்படலையடிக்குப் போனேன். தபாற்சேவகன் உள்ளூர்க்கடிதம் ஒன்றினைத் தந்து விட்டுப் போனான், யாரிடமிருந்து வருகிறது, இது' என யோசித்தபடியே கடிதத்தினை திறந்து கடிதத்தைப் பிரித்துப் பார்த்த போது ''அன்புமிக்க அப்பா அம்மா சகோதரர்கள் ஆகியோருக்கு ''எனத் தொடங்கியதைக் கண்டுவியப்புடன் தொடர்ந்து வாசித்தேன். ''நான் அந்நியரின் ஆக்கிரமிப்புக்குட்பட்டுள்ள எனது தாயகத்தை மீட்டெடுக்கப் போராடப் போகின்றேன். அப்போது தான் எங்கள் தமிழ் மண்ணில் தன்மானமுடன் தலைநிமிர்ந்து யாரும் வாழக் கூடியதாக இருக்கும். அடிமைப்பட்டுள்ள எம்மினத்துக்கும் மண்ணுக்கும் முதலில் வேண்டுவது விடுதலையேயல்லாது வேறொன்றுமல்ல. எனவேதான் நானும் பள்ளிக் கூடப்பாதையை விட்டுப்போர்க்களப் பாதையில் நடக்கின்றேன். எனவே என்னைத் தேடி அலைய வேண்டாம் என உங்களை மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். நிற்க, பெற்றோர் எக்கேடு கெட்டாலும் அது பற்றிக் கவலை கொள்ளாது புதுச்சைக்கிள், புதுப்புது உடைகளை அணிந்து கொண்டும், கையில் மோதிரமும் கடிகாரமும், கழுத்தில் சங்கிலியும் போட்டுக் கொண்டும்; நேரம் தவறாது சாப்பிட்டுக்கொண்டும்; கல்வியைப் பற்றிக் கவலை கொள்ளாதும் இன மொழி மண் பற்று இல்லாதும், வீட்டுக்கும் உதவாதும் நாட்டுக்கும் உதவாதும் றோட்டுச் சுற்றும் ''என் மட்டத்தவர் சிலரைப் போலென என்னையும் எண்ணிக் கொண்டு புதுச் சைக்கிள் மோதிரம் சங்கிலி பூட்டி என் விடுதலை உணர்வை வாங்கி விடலாம் எனக் கற்பனை பண்ணிய உங்களை எண்ணிக் கவலை கொள்ளுகின்றேன். எனக்கென வாங்கியவைகள் அனைத்தும்உங்களிடமே உள்ளன. என்னைத் தேடாதீர்கள் காலம் வரும் போது, நீங்கள் விரும்பினால் உங்களிடம் வருவேன். தம்பியையும் தங்கையையும் கவனமாக வளருங்கள். அப்பாவுக்கு இது பற்றித் தெரிவியுங்கள். அவர் எனது இத்திருப்பத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர், நீங்கள் உங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள் — இப்படிக்கு உங்கள் மகன் கண்ணன்'' '' என்று எழுதப்பட்டிருந்தது சிறிது நேரம் என்ன செய்வது என்று அறியாது திகைத்து நின்றேன். சில கணப்பொழுதில் மனதைத்திடப்படுத்திக் கொண்டு கண்ணனுடைய பாடசாலை அதிபரான உங்கள் நண்பரிடம் நேரே சென்றுகண்ணனுடைய கடிதத்தினைக் காண்பித்தேன். அவர் சிறிது நேரம் சிந்தனை செய்து விட்டு ஏதோ தீர்மானித்தவராய். சில மணி நேரம் கழித்து வரும்படி கூறினார் மீண்டும் அவரிடம் போன போது ''கண்ணன் போராட்டத்தில் இணைந்து கொண்டமை உண்மைதான். ஆனால் கண்ணனைச் சந்திக்க இயலாது. '' என்று ஆறுதல் கூறி அனுப்பினார். எங்கள் சிறு ஊரிலேயே போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வரிசையில் கண்ணன் பன்னிரண்டாவது இடத்தைப் பெறுகின்றான். இன்னும் எத்தனை பன்னிரண்டோ தெரியாது. சிறிலங்காவின் அடக்குமுறை — அழிப்புமுறை — வளர வளரத் தமிழ் இளைஞர்களின் வேகமும் தொகையும் வளர்ந்து வருகின்றது. இது தவிர்க்க இயலாததாகும் இவற்றினை நன்கு அறிந்து கொண்டவளாதலால் நான் மனதைத் திடப்படுத்திக் கொண்டுவிட்டேன் நீங்கள் தான் மனதைத் தளர விட்டு விடாதீர்கள். கண்ணன் குறிப்பிட்டுள்ளதைப் போன்று மனப்பக்குவம் உங்களுக்கு இருக்கும் என்றே நம்புகின்றேன். இருக்க வேண்டுமென்றே பிரார்த்திக்கின்றேன். கண்ணம்மாவும் ஈஸனும் சுகமே உள்ளனர். உங்கள் சுகம் அறிய ஆவல் — உங்கள் கமலா ''எனக்கடிதத்தை முடித்திருந்தாள், கமலா!

கடிதத்தை வாசித்து முடித்திருந்த முருகேசனால் தனது தாயகத்தின் யதார்த்த நிலைமையை ஓரளவுக்குத்தான் தெளிந்து-தெரிந்து-கொள்ளும்திறனையும் பெற்றிருந்தான்!

சிறிது நேரம் அவனது மனம் தாயக நிலைமைகளை. எடைபோட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது. அவனதுஉடலோ கட்டிலில் படுத்திருந்தது முருகேசனுடைய மனதில் திடமும் தெளிவும் சில நிமிடங்களில் உருவாகி விட்டது. என்னைச் சமாளிப்பதற்காகக் கமலா இப்படி எழுதி இருக்கிறாளேயல்லாது மூத்த மகன் மேல் உயிரையே வைத்திருக்கும் அவளின் மனம் வேதனைப் படத்தானே செய்யும். இந்தத் துன்ப நேரத்தில் அவளின் மனதுக்கு ஆறுதல் தர நான் அவ்விடத்தில் இல்லையே என எண்ணிக் கவலைப்பட்டவனாக''நடந்தவை பற்றி எண்ணி நலிவடைய வேண்டாம், கமலா''நாடு விட்டு நாடுவந்து உழைத்தது போதும் எனவே நம்புகின்றேன். விரைவில் உங்களோடு இருப்பேன்'' எனத் தெரிவிக்கும் கடிதத்தினைக் கமலாவுக்கு எழுதிட அவனது கை அவனையும் மீறிய அவசரத்தோடு பேனாவையும் கடதாசியையும் எடுத்துக் கொண்டது!!

(யாவும்கற்பனை)

# மிகை அதிர்வு ஒலி அறிவியல்

நாம் வாழும் உலகு ஒலிகளால் நிறைந்தது. ஒலிகளே இல்லாமற் போகுமேயாகில். உலகில் மயான அமைதியே குடிகொண்டிருக்கும்.

ஆதிகாலத்திலேயே மனிதன் ஒலிகளைச் சிறப்பான முறையில் ஒன்று கூட்டி இன்னிசையை உண்டாக்கினான். இன்னிசையை முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட கலை என்றும் கருதப்படுகிறது. எனவே ஆதிகாலத்திலிருந்தே மனிதன் ஒலியின் இயல்புகளை ஆராய்ந்தவண்ணமிருக்கிறான்

19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை ஒலிநூல்பற்றிய எல்லாச் செய்திகளையும் தாமறிந்ததாகவிஞ்ஞானிகள்கருதினர். ஆனால் பின்னரே ஒலி நூலில் புதியதொரு அத்தியாயத்தைக் காணும் நிலையை அடைந்தனர். அதாவது கேளாஒலியைப் பற்றி அறிந்தனர்.

மனிதனது காது வெவ்வேறு அதிர்வெண்களைஉடைய ஒலிகளை வேறுபடுத்திக் கிரகிக்க வல்லது. சாதாரணமாக வினாடிக்கு 1000 இலிருந்து 3000 முறைகளுக்கு அதிர்வடையும் ஒலிகளைக் காதானது எளிதில் கிரகிக்கின்றது. ஒலியின் அதிர்வெண் குறையக்குறைய மனிதனின் கேட்கும் திறனும் குறைகிறது.

வினாடிக்கு 16 இலிருந்து 20 அதிர்வுகளையுடைய ஒலிகளை மனிதன் கேட்கவே முடியாது. இதனையே குறை அதிர்வு ஒலி என்கிறோம். இவ்வாறு குறை அதிர்வு ஒலியை மனிதன் கேட்க முடியாதது ஒருவகையில் நல்லதே. இல்லாவிடில் நமது இதயத் துடிப்பை நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

குறை அதிர்வு ஒலிகளைக் கேட்க முடியாதது போலவே மிகுதியான அதிர்வுகளையுடைய ஒலிகளை மனிதனால் கேட்க முடிவதில்லை. வயது, தனித்தன்மை இவற்றைப் பொறுத்துவினாடிக்கு 16,000 20,000 அதிர்வுகளை உடைய ஒலிகளை மனிதனால் கேட்க முடிவதில்லை. இத்தகைய மிகுதியான அதிர்வுகளை உடைய ஒலியை மிகையதிர்வு ஒலி என்கிறோம்.

1914ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல்களின் தொல்லை மிகுந்திருந்தது. இச்சமயத்தில்தான் எதிரொலியைக் கொண்டு நீரினடியிலுள்ள பொருள்களைக் கண்டு பிடிக்கலாமென்ற எண்ணம் மின் பொறியிலாளரான கான்ஸ்டான்டின் கிலோவ்ஸ்கி என்பவருக்கு ஏற்பட்டது.

இவர் பிரேஞ்சு நாட்டு அறிஞர் போல் லாங்கெவினுடன் கலந்து எதிரொலியைப் பயன்படுத்தும் முறையைச் சீர்படுத்தினார்

அதிர்வெண் மிகுதியாகவுள்ள ஒலித்துடிப்பொன்று நீரில் செலுத்தப்பட்டு திரும்பப் பெறப்படுகிறது. ஒலியானது இவ்வாறு சென்றுதிரும்பி வருவதற்கான காலத்தையும், நீரில் ஒலி அலைகளின் வேகத்தையும் அறிந்து நீரினடியிலுள்ள பொருளின் தொலைவை நாம் அறியலாம். லாங்கெவின் பலவகையான அனுப்பிகளையும், வாங்கிகளையும் கொண்டு ஆய்வுகளை நடாத்தி இறுதியில் படிகக்கல்லே இவ்வலைகளை உண்டுபண்ணச் சிறந்த பொருள் என்று கண்டறிந்தார்.

படிகக்கல் ஓர் அழுத்த மின் பிறப்பியாகும் அதாவது இக்கல்லின்மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் பொழுது மின்சாரம் உண்டாகிறது.

அதேபோல் மின் விசையை இக்கல்லின் மீது செலுத்தும் போது அது விரிவடைகிறது. இந்த விளைவு சிறிதாக இருந்த போதிலும், ஒலிப் பெருக்கத் தத்துவத்தின் மூலமாகப் பயனுடையதாக்கலாம் மாறும் மின் விசையினால் இப்படிகத்தைத் தூண்டினால் அது அதிர்வுறுகிறது. இவ்வாறு லாங்கெவின் ஒரு கிலோவாட் மிகையதிர்வு ஒலியை நீரினுள் செலுத்தியதிலிருந்து மிகையதிர்வு ஒலி அறிவியல் பிறந்தது. இதன் பின்னரே நீர்மூழ்கிக்கப்பல்களைக் கண்டுபிடிக்கவும், மீன் கூட்டங்களைக் கண்டுபிடிக்கவும், ஆழம் கண்டுபிடிக்கவும், மிகையதிர்வு ஒலி பயன்படுத்தப் பட்டது.

மேலும் உலோகங்களில் ஏதேனும் குறையிருந்தால் அவற்றைக் கண்டுபிடிக்கவும் இவ்வொலி பயன்பட்டது ஒரு உலோகத் துண்டில் குறையேதும் இல்லாவிடில் மிகையதிர்வு ஒலித்துடிப்பு, அத் துண்டின் வழியாகச்சென்று பிரதிபலிக்கப்படுகிறது. ஆனால் அத்துண்டில் குறையேதும் இருக்குமாயின் மிகையதிர்வு ஒலியின் ஒரு பகுதியானது துண்டில் குறை இருக்கும் தொலைவுவரை சென்று அங்கிருந்து பிரதிபலிக்கிறது. இக்கொள்கை நெறி மருத்துவத் துறையிலும் . பயன்படுத்தப் படுகிறது.


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்.

# 1994-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் சுழிபுரம் / வட்டுக்கோட்டை / சங்கானை/ அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க் குறிக்கப்பட்ட இறைச்சிக் கடைகள், சந்தைகளிற்கான சீல் வைத்த கேள்விகள் 09-11-93-ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் 8-11 93 ம் திகதி பி. பகல் 2.00 மணிவரை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 9-11-93-ம் திகதி பி. பகல் 2.00 மணிக்கு பிரதேசசபைப் பணிமனையில் வைத்து திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் தங்களுடைய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேசசபை தலைமைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம் நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பின்போடவோ, இரத்துச் செய்யவோ எனக்குப் பூரண அதிகாரம் உண்டு. கொல்களம் சங்கானை உப அலுவலக பகுதியில் (ஓடக்கரை வீதி) அமைக்கப்பட்டிருக்கின்றது. தொழுவம் சங்கானை உப அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. கொல்களக் கட்டணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்பட வேண்டும்.

## 1994 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம். |
|---|---|---|---|
| **சுழிபுரம் உப அலுவலகம்** | | | |
| 1) சத்தியக்காட்டுச் சந்தை | 17,100.00 | 100.00 | 50.00 |
| 2) பல்லசுட்டிச் சந்தை | 3,080.00 | 100.00 | 50.00 |
| 3) தொல்புரம் மத்திய சந்தை | 440.00 | 100.00 | 50.00 |
| 4) பொன்னாலைச் சந்தை | 1,650.00 | 100.00 | 50.00 |
| 5) மாட்டிறைச்சிக் கடை | 25,000.00 | 250.00 | 50.00 |
| 6) ஆட்டிறைச்சிக் கடை | 1,200.00 | 100.00 | 50.00 |
| **சங்கானை உப அலுவலகம்** | | | |
| 1) பொது மரக்கறிச் சந்தை | 31,900.00 | 250.00 | 50.00 |
| 2) மீன் சந்தை | 30,800.00 | 250.00 | 50.00 |
| 3) கருவாட்டுக் கடை | 1,330 00 | 100.00 | 50.00 |
| 4) மாட்டிறைச்சிக் கடை | 60,000 00 | 250.00 | 50.00 |
| 5) ஆட்டிறைச்சிக் கடை | 10,000.00 | 100.00 | 50.00 |
| **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | |
| 1) பொதுச் சந்தை | 17,600.00 | 250.00 | 50.00 |
| 2) மாட்டிறைச்சிக் கடை | 7,500.00 | 100.00 | 50.00 |
| 3) ஆட்டிறைச்சிக் கடை | 7,500.00 | 100 00 | 50.00 |
| **அராலி உப அலுவலகம்** | | | |
| 1) மாட்டிறைச்சிக் கடை | 5,700.00 | 100.00 | 50.00 |

வட்டுக்கோட்டை மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகள் தங்கள் செலவில் எமது அனுமதியுடன் தாமே வியாபாரத் தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே அராலி மாட்டிறைச்சிக் கடையும் அமைத்தல் வேண்டும்.

ரூபினி கனகரத்தினம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.

வலி மேற்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
சுழிபுரம். 19-10-1993

[சி-7748]



## நெஞ்சம் நெகிழும் 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி பரமேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட மொழி பெயர்ப்பாளரும், தே. சே. வங்கி-சட்ட ஆலோசகர்' முருகேசு&நீலகண்டன் Attorney - at - Law & Notaries public)

**மண்ணுறவு 18-04-1934** **விண்ணுறவு 22-09-1993**

நினையாத நேரம் அணைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், எமது உயர் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எமது குல தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரது மரணத்தின் போது எமது துயரங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் பலவழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரது அந்தியேஷ்டி சபீண்டிகரண கிரியைகள் இன்று இல. 16, கினிப்போட் பிளேஸ், கொழும்பு- 04 இல் நடைபெறுகின்றது.

கண்ணீர் சொரிந்திடத் தினமும் கதறிட விதியோ?

பிரிவால் துயருறும்
ப. சிவசுதன் (யாழ். மருத்துவபீடம் 2-ம் வருடம்)
நுகவில்.
கரவெட்டி,
**மனைவி, மக்கள்.**

(6318)

# இஸ்ரேல் - பி. எல். ஓ. சமாதானத் திட்டம்




இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள்

**1. கோலான் குன்று**

12,000 இஸ்ரேலியர் இங்கு வசிக்கின்றனர். 1967 போரில் இஸ்ரேல் இப்பிரதேசத்தை கைப்பற்றும் வரை சிரியாவின் பகுதியாக இது இருந்தது. 1974இல் இதன் ஒரு பகுதி மீளளிக்கப்பட்டது. மிகுதி 1981இல் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டது.

**2. மேற்கு கரை**

இங்கு ஒரு லட்சம் இஸ்ரேலியரும் பத்து லட்சம் பலஸ்தீனியரும் இங்கு வசிக்கின்றனர். 1967 போரில் ஜோர்தானிடமிருந்து இஸ்ரேலால் கைப்பற்றப்பட்டது. அதன்போது ஜெரிக்கோ நகரும் கிழக்கு ஜெருசலேமும் கைப்பற்றப்பட்டு பின்னர் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டது.

**3. காசா பிரதேசம்**

3,300 இஸ்ரேலியரும் எட்டு லட்சம் பலஸ்தீனியரும் இங்கு வசிக்கின்றனர் 1967-ல் இஸ்ரேலால் கைப்பற்றப்படும் வரை எகிப்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. புதிய ஒப்பந்தப்படி காசா மற்றும் ஜெரிக்கோ பகுதிகள் பலஸ்தீனரின் தன்னாட்சியின் கீழ்வருகிறது.

**4. சினாய் பிரதேசம்**

ஏழு லட்சம் எகிப்தியர் இங்கு வசிக்கின்றனர். 1967-ல் இடம்பெற்ற யுத்தத்தின் போது எகிப்திடமிருந்து கைப்பற்றப்பட்ட இப்பகுதி 1973-ல் ஏற்பட்ட எகிப்து - இஸ்ரேல் ஒப்பந்த மூலம் எகிப்து மீளப்பெற்றுக்கொண்டது

பலஸ்தீனிய சுயாட்சிக் கொள்கைப் பிரகடன அறிக்கை செப்ரெம்பர் 13-ஆம் திகதி வாஷிங்டன் நகரில் கைச்சாத்தாகியது. இந்த அறிக்கை பத்து மாதக் காலக் கெடுவில் பலஸ்தீனிய சபைக்கான தேர்தல் நடைபெறுவதை எதிர்பார்க்கிறது. இந்தச் சபைஐந்து வருட இடைக் காலத்தில் வெஸ்ட் பாங்கையும், காஸாவையும் நிர்வகிக்கும், குறிப்பிட்ட இந்தஇடைக் காலத்தில் இசுரேல் மற்றும் பலஸ்தீனியர்கள் ஒரு நிரந்தர சமாதானத் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவார்கள். இரு தரப்பினரும் காஸாவிலும், வெஸ்ட் பாங் ஜெறிக்கோ நகரிலும் இருந்து இசுரேலியதுருப்புகளைவாபஸ் பெறுவது பற்றிய விளக்கங்கள் குறித்து உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்கள். இந்தப் பிரகடனம் ஒக்ரோபர் 13ஆம் திகதியிலிருந்து செயற்படும் தொடர்ந்தாற் போல் கால அட்டவணை பின்வருமாறு செயற்பட உள்ளது

உடனடியாக—

- இசுரேலிய இராணுவ அரசின் வசமிருந்த ஆட்சியும் சிவில் நிர்வாகமும் 'அதிகாரமளிக்கப்பட்ட பலஸ்தீனர்'' களுக்கு நான்கு விடயங்களில் மாற்றப்படும். கல்வி மற்றும் கலாசாரம், சுகாதாரம், சமூக சேவை, நேரடி வரி மற்றும் சுற்றுலா ஆகிய விடயங்களே இவ்வாறு மாற்றப்படவுள்ளன.
- இசுரேல் - பலஸ்தீன கூட்டுக் கண்காணிப்புக் குழு ஒன்று நிறுவப்படும்.
- நீர், மின்வலு, சக்தி, நிதி, போக்குவரத்து மற்றும் காஸாத் துறைமுகம் உட்பட தொடர்புகள் ஆகியவற்றை இசுரேல் - பலஸ்தீன பொருளாதாரக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் அத்துடன், வர்த்தகம், தொழில், தொழில் உறவுகள், பயிற்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தொடர்புச் சாதனம், வெஸ்ட் பாங் மற்றும் காஸாவுக்கான சர்வதேச ஒத்துழைப்புடனான பொருளாதார அபிவிருத்தித் திட்டம் மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தையும் மேற்படி கூட்டமைப்பு செயற்படுத்தும்
- 1967இல் வெஸ்ட் பாங் மற்றும் காஸாவில் இருந்து இடம் பெயர்ந்த பலஸ்தீனியர்களை மீளவும் அனுமதிப்பதற்கும் ''பிளவையும ஒழுங்கீனத்தையும் தடுப்பதற்கான" நடவடிக்கையைமேற்கொள்ளவும் ஏற்படுத்தப்படும். தொடர் நடவடிக்கைக் குழுவில் அங்கம் வகிக்க ஜோர்தானும், எகிப்தும் அழைக்கப்படும்.

**டிசம்பர் 3, 1993**

- ஜெறிக்கோ பிரதேசம் மற்றும் காஸா திட்டிலிருந்து இசுரேலின் வெளியேற்றம் தொடர்பான உடன்படிக்கையில் இசுரேலும், பலஸ்தீனியரும் கைச்சாத்திடுவார்கள் இரு பிரதேசங்களையும் பலஸ்தீனிய கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவர முழுமையான ஏற்பாடுகள் செய்யப்படும்.
- ஐந்து வருட இடைக் கால பலஸ்தீனிய சுயாட்சி உத்தியோக பூர்வ ஆரம்பம்.

**ஏப்ரல் 13, 1994**

காஸா-மற்றும் ஜெறிக்கோவிலிருந்து இசுரேலியர் வெளியேறும் கடைசித் தினம

**ஜூலை 13, 1994**

- பலஸ்தீனிய சபைத் தேர்தலுக்கான திகதி இரு தரப்பினருக்கும் இடையிலான இடைக்கால உடன்படிக்கை. இதன் பிரகாரம் சபையின் அதிகாரம் மற்றும் அமைப்பு, நிறைவேற்றுஅதிகாரம், சட்டமியற்றும் அதிகாரம், அதிகாரத்தை சபைக்குக் கையளித்தல், சுதந்திரமான நீதி அமைப்புகள் ஆகியன நடைமுறைப் படுத்தப்படும்.
- கிழக்கு ஜெருசலேமில் வசிக்கும் பலஸ்தீனியர்கள் தேர்தலில் வேட்பாளராக நிற்கவும், வாக்களிக்கவும் அருகதை உள்ளவர்களாவார்கள்.
- ஏற்கனவே காஸா மற்றும்ஜெறிக்கோவில் இருந்து வெளியேறிய இசுரேலிய படைகள் குறைந்தது தேர்தல் முடியும் வரையாவது குடிப்பரம்பல் இல்லாத வெஸ்ட் பாங் பகுதியில் நிலை கொண்டிருக்கும். மீளக்குடியேறிய இசுரேலியர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பு இசுரேலிய இராணுவத்திற்குரியது.
- இசுரேலிய இராணுவம் மீளப்பெறப்படுவதோடு சிவில் நிர்வாகமும் கலைக்கப்படும்.

**டிசம்பர் 13 1995**

- நிரந்தரக் குடியேற்றங்களை அமைப்பதற்கான இறுதித் திகதி

**டிசம்பர் 13, 1998**

நிரந்தரக் குடியேற்றங்கள் செயற்படும்.

நன்றி: புரண்ட்லைன்

# கல்விக்கட்டமைப்பில் மாற்றம்; இலக்கை அடைவது சாத்தியமாகுமா?

**பா. பார்த்தீபன்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்சமயம் அமுலில் உள்ள கல்வி நிர்வாக முறை மாற்றப்பட்டு புதிய கல்வி நிர்வாகமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கமைய வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க திருகோணமலை காரியாலயத்திற்கு சகல பிரதேச கல்விப் பணிப்பாளர்களும் அழைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்படவுள்ள கல்வி நிர்வாக முறை தொடர்பாக கலந்தாலோசனை நடைபெற்றுள்ளது.

இதற்கமைய சகல பிரதேச கல்விப் பணிப்பாளர்களும் தங்கள் தங்கள் பகுதிக்குரிய (புதிய) கல்வி நிர்வாகத்திற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளனர். இதன்படி வட-கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம் இரண்டு வலயங்களாகவும் ஏனைய திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி. வவுனியா ஆகியவை தனி ஒரு வலயங்களாகவும் இயங்கவுள்ளதாக வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சுற்று நிருபமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் 1 வலயததுள் நெடுந்தீவு, தீவுப் பகுதி வடக்கு, தீவுப்பகுதி கிழக்கு. யாழ்ப்பாணம், நலலூர், தென்மராட்சி ஆகிய பிரதேச கல்வி நிர்வாகங்களும் யாழ்ப்பாணம் 2 வலயத்திற்குள் கோப்பாய், தெல்லிப் பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, பருத்தித் துறை, கரவெட்டி கிழக்கு, மருதங்கேணி ஆகியவையும் அடங்குகின்றன.

மேற்படி யாழ்ப்பாணம் இரண்டு வலயங்களாக பிரிக்கப்படுவதிலிருந்து மாற்றீடாக வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஒரு திட்டத்தை தரும்படி யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரைப் பணித்துள்ளமையை அடுத்து யாழ்ப்பாணத்தை மூன்று வலயங்களாக பிரிக்கும் திட்டமொன்று வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் கையளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இது குறித்து முன்னுக்குப்பின் முரணான திட்டங்களும் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதன்படி யாழ்ப்பாணம் மூன்று வலயங்களாக பிரிக்கப்படவுள்ளது. இதில் யாழ்1 இதற்குள் நெடுந்தீவு, தீவுப் பகுதிகள், யாழ்ப்பாணம், நல்லூரும், யாழ்.2 இதற்குள் வலிகாமம், கோப்பாய், தெல்லிப் பழை, உடுவில், சண்டிலிப் பாய், சங்கானை, ஆகிய பிரதேசங்களும் யாழ் 3 இதற்குள் வடமராட்சி. தென்மராட்சி ஆகியனவும் அடங்குகின்றன.

இந்தபுதியதிட்டம் செப்டம்பர் 15ஆம் திகதி வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அவசர கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த மாதம் முதலாம் திகதி அல்லது 15-ம் திகதிக்கு இடையில் இதற்கான அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது

பாடசாலைகளுக்கிடையிலான கொத்தணி அமைப்பு முறை இவ் வருடத்துடன் அதாவது எதிர்வரும் டிசம்பர் 31 ம் திகதியுடன் முடிவடைகின்றது எனவும் இதனை அடுத்து பிரதேச கல்வி நிர்வாக முறை ஜனவரி முதலாம் திகதியில் இருந்து தனித்து செயற்படவுள்ளது எனவும் தெரிய வருகிறது.

இதற்கான நடவடிக்கைகள் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களிற்கு ஒன்று என்கின்றவகையில் ஒவ்வொரு பிரதேச கல்விச் செயலகம் ஆரம்பிக்கப் படும். இச் செயலகத்தில் ஒவ்வொரு கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் வேலைகளுக்கு பொறுப்பாக ஒரு உதவிக் கல்விப்பணிப்பாளர் நிதி உதவியாளர், காரியாலய உதவியாளர் மற்றும் எழுதுவினைஞர்நால்வரும்கணக்குப் பதிவாளர் ஒருவரும் சிற்றூழியருமாக சுமார் 10 இற்கு மேற்பட்டோர் நியமிக்கப்படவுள்ளனர். இவர்கள் யாழ். கல்வித்திணைக்களத்தில் இருந்து பிரதேச கல்விச் செயலகங்களிற்குஇடமாற்றம் செய்யப்பட்டும் உள்ளனர் பிரதேச கல்வி அலுவலகத்திற்கு ஏற்ற வகையில் அலுவலர்களின் எண்ணிக்கை மாறுபடும்.

இதனை அடுத்து மேற்படி பிரதேச கல்விச் செயலகங்களை முதலில்நிறுவி அவற்றை ஒரு குறிப்பிட்ட வலயங்களாக பிரித்து, அதற்கு ஒரு கல்விப்பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார் என்பதுதான் புதிய திட்டம் இதன்படி உதாரணமாக மூன்று வலயங்களாக பிரிக்கும் திட்டத்தின் படி ஒவ்வொரு வலயத்திற்கும் சுமார் 140, 142, 192 பாடசாலைகள் அடங்குகின்றன.

இதற்கான முன் நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் இருந்து சில பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் திருகோணமலைக்கு நேர்முகப் பரீட்சைக்கு சென்று திரும்பியுள்ளனர்.

எனினும் இவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து இத்தகைய கல்வி நிர்வாக அமைப்பு மாற்றத்தினால் என்ன பெரிதாக நிகழ்ந்துவிடப் போகிறது? இதனால் என்ன பயன்? இது எத்தகைய மாற்றத்தை கொண்டுவரப் போகின்றது?

இங்கு கல்வி நிர்வாக அமைப்பு அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்ற ஒரு நிலையை காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் வலயங்களிற்கு வலயம் கல்வியில் வளர்ச்சி பெற மாணவர்களிற்கு ஊக்கங்கள் வழங்க இந்த புதிய கல்வி நிர்வாக முறை அமையலாம் என எதிர்பார்கப்படுகின்றது.

மேலும் இக் கல்வி முறை யாழ். மாவட்டத்தில் சாத்தியமாகுமா? என்பது நடைமுறையில் பார்க்கின்றபோது தான் தெரிந்து கொள்ள முடியும். இருந்தும் இதனை அலசி ஆராய்ந்து இதன் உண்மையான சாரத்தை எடுத்துப் பார்க்கும்போதுதான் இதன் பலாபலன் புரியும். அடிப்படையாக நோக்குகின்ற இடத்து முன்புஇருந்த கல்வி நிர்வாக கட்டமைப்பு மாற்றப்படுகின்றது என்றால் இதன் முன்பிருந்த கல்வி நிர்வாக கட்டமைப்பு சரிவர இயங்கவில்லை, முழுமையான செயற்பாடுகளை கல்வி வளர்ச்சிக்கு ஈட்டித் தரவில்லை என்றே கூறமுடியும் மற்றைய விடயம் இதனைத் தொடர்ந்து புதியகல்விக் கட்டமைப்பு இங்கு என்ன புதிய மாற்றத்தை தந்து விடப்போகின்றது. இது வெறும் அதிகார பரவலாக்கல்தான் முன்பு தனி ஒருவரின்அதிகாரம் தற்போது பலருடைய அதிகாரத்திற்கு யாழ் மாவட்டத்தில் கல்விக் கட்டமைப்பு மாற்றப் படு படுகின்றது என்றே கூற இடமுண்டு.

இம்மாதபிற்பகுதியில்மேற்படி நிர்வாக கட்டமைப்பிற்கான முன் நடவடிக்கையை யாழ்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## கல்விக்

பிரதேச கல்விப்பணிப்பாளர் நடைமுறைப்படுத்தப் போவதாக தெரிவித்தார். இது வெற்றியளித்தாலே அடுத்த முறைக்கு காலடி எடுத்து வைக்க முடியும். இதற்கான அனுமதியும் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் இருந்து கிடைக்க வேண்டும் இதற்குபாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர். மாணவர்கள். மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் தேவையானதும் அத்தியாவசியமானதும் ஆகும் இவற்றை எல்லாம் தாண்டி இந்த புதிய கல்வி நிர்வாக அமைப்பு முறை நிலை நாட்டப்பட வேண்டும் இது வரைக்கும் யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர்தான் முன்னோடியாக வுள்ளார்.

இப் புதிய கல்வி நிர்வாக முறையானது வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் அமுலில் உள்ளதா என்கின்ற வினாவைத் தொடுத்துப்பார்க்கின்ற போது கொழும்பு அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படவில்லை எனவும் ஏனைய இடங்களில் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. அவ் இரண்டு இடங்களிலும் கல்வி நிர்வாகம் சீர் குலைந்து விடும் என்பதற்காக அம் மாவட்டக் கல்வி அதிகாரிகள் இதற்கு சம்மதிக்கவில்லை என தெரிய வருகின்றது

இவ்வாறு மாவட்டங்களிற்கு மாவட்டங்கள் வேறுபட்டு திட்டங்கள் மாறுபட்டுக் காணப்படும் போது நிர்வாகம் சமமில்லாத ஒரு நிலை ஏற்படக்கூடும்.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கல்வி நிர்வாகத்தில் சில சிக்கல்களும் தோன்றியுள்ளன. அதாவது ஆசிரியர் சம்பளம் மற்றும் ஒய்வூதியம் போன்றவை உடனடியாக பிரதேச கல்விச் செயலகங்களிற்கு மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம் இதனால் இவ்வாறான நடைமுறை சிக்கல்களை தவிர்த்து தான் நிர்வாகம் நடைமுறை செய்யவுள்ளதாக அறிய வருகின்றது.


Patrician Institutes

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION — O.B.A — S.P.C — PRO VERITATE ET JUSTITIA

### பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**பின்வரும் பயிற்சி நெறிகள் 30- 10- 93 சனிக்கிழமை ஆரம்பமாகும்.**

1. COMPUTER PROCESSING COURSES.
2. CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING Duration 6 Months
3. SPECIAL ENGLISH CLASSES Duration 4 Months
4. TOEFL (Test of English as a Foreign Language) Duration: 4 Months
5. SHORT HAND AND TYPING (English)
6. MOTOR MECHANISM COURSE - மோட்டார் மெக்கானிஷம்
(Motor Cycle, Water pump, Generator Engines) (Motor Car, Lorry Engines)
மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், மற்றும் கார், லொறி எஞ்சின்கள், [பெற்றோல், டீசல் யாவும்]
★ LECTURES By: Mr. A. S. Gunaseelan (Automobile Engineer) Duration: 6 Months

**பின்வரும் பயிற்சி நெறிகள் 29. 10. 93 வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணிக்கு ஆரம்பமாகும்.**

7. ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு
★ House wiring ★ Industrial wiring Duration: 3 Months
8. MOTOR WINDING - மோட்டார் வைண்டிங் Duration: 4 Months
9. GENERAL ELECTRICIAN - ஜெனரல் எலக்ரீஷியன் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்

★ Fundamental of Electricity ★ Magnet ★ Transformers
★ D/C machine & Alternators ★ Induction motors
★ A/C Theory ★ House wiring ★ Auto Electricals
★ Three phase ★ Electrical wiring Faults & Repairs of Air Condition and Refrigeration

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institutes,
59, St. Patrick's Road, Jaffna.

(சி-7703)



### தமிழீழத்தின் புதிய அத்தியாயம் !

அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்

## படமாடம்

சகல விதமான ★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ அலுமீனிய இணைப்புக்கள்
★ சாமிப்படங்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டுப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

படமாடம் அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7739)



### நல்லின பலாக்கன்று முற்றிலும் முற்றிலும் இலவசம்

5 ஜாம் போத்தல்களை எமது நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணம் ரூபா 25/- பெற்றுக் கொள்வதுடன் நல்லினப் பலாக்கன்றை முற்றிலும் இலவசமாக எடுத்துச் செல்லுங்கள்.

ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி)லிமிட்டட்

(சி/7756) 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### கல்விப்பட்டப்பின் டிப்ளோமா ஆண்டுப் பரீட்சை – 1992

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம்/பகுதி நேரம் I / பகுதி நேரம் II போன்ற பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ். பல்கலைக் கழக பரீட்சைக் கிளையில் அலுவலக நேரத்தில் 18-10-1993 தொடக்கம் காலை 9-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் 01-11-1993 தொடக்கம் 09-11-1993 வரை நடைபெறவுள்ளது.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(சி-7752)

### பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கை நெறி 1992/93

### நேர்முகப் பரீட்சை

பட்டப்பின் கல்வித் தகைமைப் பரீட்சையிற் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை நவம்பர் 6ஆம், 7ஆம், திகதிகளில் நடைபெறும்.

இந் நேர்முகப்பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையிற்சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பல்கலைக்கழக அறிவித்தற் பலகையிலும் இடப்பட்டுள்ளது.

–பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்,
20.10-1993.
(சி- 7751)

### ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
15- 04- 1975

வீரச்சாவு
22- 10- 1992

### வீரவேங்கை காங்கேயன்
### (பாலசிங்கம் விமலன்)

திதி:– 10– 11- 1993

ஆண்டொன்று சென்றதையா
ஆறவில்லை எமது மனம் பால் வடியும்
அழகு முகத்தை தேடுகின்றோம் கலங்குகின்றோம்.
தெம்பற்ற மனநிலையில் வாடுகின்றோம்
வதங்குகின்றோம்
இந்நிலையில் பல ஆண்டு வந்தாலும் என்றும்
எம்மை விட்டு நீங்காது உன் நினைவலைகள்

யாழ்/ஆத்திசூடி வீதி அண்ணமா ஈஸ்வரர் ஆலயத்தில் வீரவேங்கை காங்கேயனின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனைகள் இன்று (22- 10- 93) நடைபெறும்.

உறவினர் 'தவகிரி'
கேணியடி லேன்,
மீசாலை.
(6345)

பெற்றோர், சகோதரர்
கொததம்பியாகுளம்,
துனுக்காய்.

# கோபாலசாமிக்கு எதிரான நடவடிக்கை; ஒரு திட்டமிட்ட முக்கூட்டு சதி?

"வை. கோபாலசாமியின் முன்னேற்றத்திற்காக உங்களைத் தீர்த்துக்கட்ட விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாக இந்திய அரசிடம் இருந்து உறுதி செய்ய முடியாத செய்திகள் கிடைத்துள்ளன'' இவ்வாறாக தமிழக அரசின் தலைமைச்செயலாளர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதிக்கு எழுதிய கடிதம் தி.மு கவின் உட்கட்சிப் பூசலை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது என்றால் மிகையில்லை.

மத்திய புலனாய்வுத்துறைக்கு கிடைத்த 'ஊர்ஜிதப்படுத்தப்படாத இரகசியத்தகவலை' அடுத்தே கருணாநிதிக்கு இக்கொலைத்திட்டம் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டது. ஆனால் கருணாநிதி தொடர்ந்து நடந்து கொண்ட முறையானது இக்கொலைத் திட்டம் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது போன்றும் இக்கொலைக்கு வை. கோபாலசாமி உடந்தை என்பதைத் தான் ஏற்றுக் கொள்வது போன்றும் இருந்தது.

இந்நிலையில் இக் குற்றச்சாட்டு குறித்து வை. கோபாலசாமியின் தரப்பினர் தெரிவிப்பது முக்கியம் பெறுவதாகவே உள்ளது. அதாவது 'தி.மு.கவினுள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு உளவுத் துறையினர் செய்த சதியே' இதுவென்ற குற்றச்சாட்டும், 'கோபாலசாமி இல்லாத தி.மு.கவுடன் உறவு வைத்துச்கொள்வோம்' என்ற சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளதான கோபாலசாமியின் அறிவிப்பும் கவனத்தில் கொள்ளக் கூடியதாகும் அத்தோடு நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டும் முக்கியம் பெறுகின்றது. உளவுத்துறையினர் விடுதலைப்புலிகள் கருணாநிதியைக் கொலைசெய்ய திட்டமிட்டதாக அறிக்கை தயாரித்தபோது வை. கோபாலசாமியை தலைவராக்கும் நோக்கிலேயே இக் கொலைத்திட்டம் வகுக்கப்பட்டது என அறிக்கையில் சேர்த்துக்கொள்ளுமாறு கருணாநிதி தரப்பு கேட்டுக்கொண்டார் என்பதே நாஞ்சில் மனோகரனின் குற்றச்சாட்டாகும்.

இக்கொலைத் திட்டம் குறித்த குற்றச்சாட்டானது எங்கிருந்து உதயமானது எப்படி உதயமானது என்பவை ஒருபுறம் இருக்க இக் கொலைக்கான திட்டம் ஓர் ஊர்ஜிதமற்ற தகவலின் அடிப்படையிலானது என்பது கருணாநிதிக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலிலேயே கொடுக்கப்பட்டிருந்தும், அதனைஅவர் கருத்திற் கொள்ளாது அமர்க்களப் படுத்தியமை, இக்குற்றச்சாட்டினால்பெரும் அரசியல் லாபம்தேட கருணாநிதி முற்பட்டுள்ளார் என்பதையே காட்டுவதாக இருந்தது. இதனை வலியுறுத்துமாப்போலவே கருணாநிதியின் அடுத்தகட்ட நடவடிக்கையும் இருந்தது. அதாவது அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதான அறிவிப்பு ஆகும்.

மேலும், உளவுத்துறையின் ஊர்ஜிதமற்ற தகவல் புலிகளின் கொலைக்கான திட்டம் பற்றி அறிவிப்புக் கொடுத்திருப்பினும் கருணாநிதி அது குறித்துப் பெரிது படுத்திக் கொள்வதற்கு புலிகள் தொடர்பாக காரணம் எதுவும் இருப்பதாக இல்லை. ஏனெனில், விடுதலைப்புலிகள் தமிழீழ தேசிய இன விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலும் சரி, தமிழக மண்ணை பின்தளமாகப் பயன்படுத்திய காலத்திலும் சரி அதற்கு பின்னரும் சரி தமிழக அரசியலில் தலையிடுவதைத் தவிர்த்தே வந்துள்ளனர் தமிழக மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்று தமிழீழத்தை அமைக்க முற்பட்டு நின்ற புலிகள் சீர்கெட்டுப்போயுள்ள தமிழக அரசியல் சகதிக்குள் புதைந்து போக விரும்பவில்லை.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் கொலைத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளதாக புலனாய்வுத்துறை ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்றை வெளியிட்டதைக் கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தியமை என்பது, அவரது அரசியல் நோக்கங்களும், அபிலாசைகளும், அண்மையில் திசை மாறிச் செல்கின்றன என்பதை வெளிப்படையாகக் காட்டுவதாகவே அமைந்தன இதற்கு தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளும், தி. மு. காவில் எழுந்துள்ள வாரிசுப் போராட்டமும் முக்கியமான காரணிகளாகக் கருதுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

இராணிப்பேட்டை சட்டமன்ற இடைத் தேர்தலிலும், பழனி பாராளுமன்ற தொகுதியிலும் தி.மு.கவும் காங்கிரசும் கண்ட படுதோல்விகள், தமிழகத்தில் இக்கட்சிகளின் எதிர்காலம் பற்றிய கேள்விகளை உருவாக்கியிருந்தன. இந்நிலையில் தனித்து நின்று தி. மு. காவோ அன்றி காங்கிரசோ தமிழக சட்ட மன்றத்தையோ அன்றி லோக்சபாவுக்கான ஆசனங்களையோ கைப்பற்றுதல் என்பது பெரும் சிரமமானது என்பதை இத் தேர்தல் உணர்த்தியிருந்தது-

ஆகையினால், தமிழகத்தின் அடுத்த தேர்தலில், கட்சிகளின் கூட்டு என்பது அவசியமான ஒன்றாகவே உணரப்பட்டிருந்தது. தமிழக அரசியலிலோ அன்றி இந்திய அரசியலிலோ இன்று எதிரும் புதிருமாக உள்ள கட்சிகள் நாளை கூட்டுச் சேர்வதும், இன்று 'தேன்நிலவு' அனுபவிக்கும் கட்சிகள் நாளை 'விவாகரத்துப்' பெறுவதும் புதுமையான ஒன்றல்ல. இந்நிலை இராணிப்பேட்டை, பழனி இடைத்தேர்தலின்பின் தி. மு. க - காங்கிரஸ் உறவில் சில நெருக்கங்கள் ஏற்பட்டன.

ஆதலினால் தற்பொழுது தி.மு.க விற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையானது. தனியாக அக்கட்சிக்குள் உள்ள தலைமைத்துவப் போட்டியோ அன்றி, தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. கவிற்கு எதிராக உருவாக்க எண்ணும் புதியஅணி ஒன்றிற்கான களைஎடுப்போ என்பது குறித்து பலர்மத்தியிலும்கேள்விஎழும்பியுள்ளது.

இந்திய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள புலனாய்வுத் துறையினர் இந்தியஅரசிற்கான புலனாய்வுத் துறையாக செயற்படுவது என்பதைவிட்டு எப்பொழுதும் மத்திய ஆட்சியிலுள்ள கட்சிகளின் புலனாய்வுத்துறையாகவே செயற்படுவது வழமையாகும். அதிலும் காங்கிரஸ்கட்சியின் புலனாய்வுத்துறையாகவே அவர்கள் செயற்படுகின்றனர். இந்தவகையில் அவர்கள் கடந்தகாலத்தில் செயற்பட்டதற்கான ஆதாரங்களும்உண்டு. எடுத்துக்காட்டாகமொராஜிதேசாய் ஆட்சிக்காலத்தில் புலனாய்வுத்துறை காங்கிரஸ் கட்சி தலைவி இந்திராகாந்திக்கு விசுவாசமாகவே உளவு வேலையில் ஈடுபட்டது. மொராஜிதேசாய் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டமைக்கு புலனாய்வுத் துறையினர் காங்கிரஸ் தலைமைத்துவத்திற்கு வழங்கிய உளவு அறிக்கைகளே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேபோன்று மாநிலங்களில் ஆட்சிக் கவிழ்ப்புக்களும், கட்சிகளைப் பிளவுபடுத்துவதிலும் உளவுத்துறையினர் கணிசமான பங்காற்றியுள்ளனர்.

இந்த வகையில் மத்தியிலுள்ள புலனாய்வுத் துறை ஊர்ஜிதமற்ற தகவல்களின் அடிப்படையில் தி. மு. க கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய அதேவேளை காங்கிரசிற்குச் சாதகமான ஓர் அறிக்கையைத் தயார் செய்தல் என்பது மிகவும் சுலபமான காரியமாகும்.

---

**ஜெயராஜ்**

---

காங்கிரஸ் ஆட்சியில் இல்லாதபோதே காங்கிரஸிற்கு விசுவாசமாகச் செயற்பட்ட புலனாய்வுத்துறை தற்பொழுது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸிற்காக இதனை செய்வதில் ஆச்சரியப் படுவதற்கு ஏதுமில்லை.

ஆனால் கோபாலசாமி தரப்பினர் அதாவது நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளது போன்று தி.மு.காவின் ஆலோசனையின்பேரிலேயே "வை. கோபாலசாமியை தலைவராக்கும் நோக்கில்'' இத் திட்டம் தீட்டப்பட்டதாக தெரிவித்துள்ளமையானது சற்று விவாதத்திற்குரியதாயினும், மனோகரனின் அறிவிற்பிற்கு சாதகமான பல காரணங்களும் இல்லாமல் இல்லை அத்தோடு இந்தியப் புலனாய்வுத்துறை காங்கிரஸின் நலனில் அக்கறை கொண்டுள்ளமையால் காங்கிரஸ் விரும்பும் பட்சத்தில் தி.மு காவின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டிருப்பினும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

தி.மு காவைப் பொறுத்து நாஞ்சில் மனோகரன் கூறியுள்ள குற்றச்சாட்டு இரண்டு விடயங்கள் தொடர்பாக முக்கியமானதாகின்றது இதில் ஒன்று வை. கோபாலசாமியினால் தி.மு க. தலைமைக்கு ஏற்பட்டுள்ள போட்டியை அப்புறப்படுத்துவது. இரண்டு எதிர்காலத் தேர்தல் வெற்றிக்காக காங்கிரசுடன் கூட்டுச் சேர்வதற்கு உள்ள தடையை அகற்றுவது என்பன ஆகும்.

திரு சுப்பிரமணியம் சுவாமி ஜனதாக்கட்சியின் தலைவராக இருப்பினும் இந்திரா காங்கிரசின் நலன்களையும் குறிப்பாக பிரதமர் நரசிம்மராவின் நலன்களையும் காப்பவராகவே செயற்படுகின்றார். இறுதியாக பிரதமர் நரசிம்மராவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போதும் சுப்பிரமணியம் சுவாமியே பிரதமர் ராவைக் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. அதாவது அஜித்சிங் ஜனதாதளத்தில் இருந்து ஏழு எம்பிக்களை காங்கிரசிற்குத்தள்ளிக்கொண்டுவந்தவர்சுவாமிஎன்றே கூறப்படுகின்றது.

இந் நிலையில் "வை. கோபாலசாமி இல்லாத தி.மு.கவுடன் கூட்டு வைத்துக் கொள்வோம்'' என்ற சுப்பிரமணியம் சுவாமியின் அறிவிப்பானது ஒரு ஜனதாக் கட்சித் தலைவரின் அறிவிப்பு என்பதைவிட காங்கிரஸ் கட்சித் தலைவரும், பிரதமருமான நரசிம்மராவின் அறிவிப்பு என்றே கொள்ள முடியும். ஆகையினால் வை. கோவை வெளியேற்றுதல் என்பது காங்கிரசைப் பொறுத்த விடயமாக உள்ளது என்பதும் உண்மையாகும்.

இதற்குக் காரணம் வை. கோபாலசாமிக்கு விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்பு உண்டெனக்கருதப்படுவதும்இன்னமும்அவர்தமிழீழக்கோரிக்கையைஆதரிக்கிறாஎன்பதும்அவர்குடும்பத்தினர் - சகோதரன் ராஜீவ்காந்தி கொலையுடன் தொடர்புபடுத்தி கைது செய்யப்பட்டமையும் ஆகும் இந்நிலையில் வை, கோபாலசாமி தி. மு. கவுடன் இருக்கும் வரை காங்கிரஸிற்கு தி மு. கவுடன்உறவு என்பது கடினமானதாகவும் விமர்சனத்திற்குரியதாகவும் ஆகிவிடும் என்ற நோக்கிலேயே காங்கிரஸ் செயற்பட்டது.

இதேவேளை தி. மு. க தலைவர் கருணாநிதியின் வாரிசிற்கு எதிர்காலத்தில் கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக எழுந்துள்ள போட்டியைத் தவிர்க்கவும், அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றவும், வை. கோபாலசாமியை கட்சியை விட்டு ஓரங்கட்டுதலோ அன்றி வெளியேற்றுவதோ அவசியமான ஒன்றாகவே இருந்தது, ஏனெனில் கட்சியில் கணிசமான செல்வாக்கை கோபாலசாமி ஏற்கனவே பெற்றிருந்தமையாகும்,

இந்நிலையில், மத்திய புலனாய்வுத் துறையின் அறிக்கையைப் பயன்படுத்தி வை. கோபாலசாமியை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள கருணாநிதி முயற்சித்திருப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை, இதேவேளை கட்சியில் தனது ஏகபோகத்தை நிறைவேற்றும் நோக்கிலும், தனது பிடியை இறுக்கும் நோக்கிலும், அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாகவும் அறிவித்தார், இது கருணாநிதியின் புதிய கண்டுபிடிப்பல்ல, முன்னாள் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனும், தற்போதைய முதல்வர் ஜெயலலிதாவும் கடைப்பிடித்த வழிமுறைதான்

ஆனால், கருணாநிதியின் இந் நடவடிக்கையில் அவருக்கு எதிர்பார்த்த அளவில் பயனைக் கொடுக்கவில்லை என்றே கூறலாம், ஏனெனில் கருணாநிதியைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளார்கள். இத் திட்டம் வை. கோபாலசாமியை தி. மு, காவின் தலைவர் ஆக்குவதற்கான நடவடிக்கையே என கருணாநிதி அறிவித்திருந்தபோதும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவோ, அன்றி வை. கோபாலசாமிக்கு எதிராகவோ மக்கள் ஆவேசம் கொண்டதாக இல்லை. கருணாநிதியின் தொண்டர்கள் தீக்குளித்து தமது விசுவாசத்தை காட்டுவதற்கு தமிழகத்தில் நிலவிய மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இடைஞ்சலாகி விட்டதாக விமரிசிக்கப்பட்டது, ஆனால் தமிழக மக்கள் தமது விசுவாசத்தை வெளியிடவிரும்பின் ஓடும்புகையிரதத்தின் முன், தண்டவாளத்தில் தலையை வைத்து தமது விசுவாசத்தைக் காட்டக் கூடியவர்கள். ஆனால், அவர்கள் புத்திசாலித்தனமாக அவ்வாறான விஷப்பரீட்சையில் இறங்கவில்லை இதுகருணாநிதி எதிர்பார்த்ததிற்கு மாறானதாகவே இருந்தது. இந் நிலையிலேயே அவர், தனது அரசியலில் இருந்து ஒதுங்குவதான அறிவிப்பையும் 24 மணிநேரத்திற்குள் வாபஸ் பெற்றுக் கொண்டார். இவ் வாபஸானது அவரது ஸ்ரண்டை வெளிக்காட்டியதாகவே இருந்தது.

இதனால் கோபாலசாமி மீதான குற்றச்சாட்டுடன் எழும் கொந்தளிப்புடன் கட்சியில் இருந்து அவரை தூக்கி எறிந்துவிடலாம் என்ற கருணாநிதியின் திட்டமும் வெற்றிகரமாக செயற்பட முடியாமல் போயிற்று. கருணாநிதி முன்னர் அவசர அவசரமாக எம். ஜி. ராமச்சந்திரனை கட்சியில் இருந்து தூக்கி எறிந்ததால் இன்றுவரை அதன் பிரதிபலிப்பை அதாவது எம். ஜி. ராமச்சந்திரன் இறந்த பின்னரும் அனுபவித்து வருபவர் இம்முறை அத்தவற்றைச் செய்யாமல், தந்திரமாக கோபாலசாமியை வெளியேற்ற எடுத்த முயற்சி, தி. மு. க மாவட்டச் செயலாளர்களினால் முறியடிக்கப்பட்டதென்றே கூறலாம். தி. மு. க மாவட்டச் செயலாளர்களில் கணிசமான தொகையினர் வை. கோபாலசாமியை ஆதரிப்பதினால் அவரை வெளியேற்றும்தீர்மானம் தி. மு காவிற்குள் திட்டவட்டமான பிளவை ஏற்படுத்தும் என்பதைக் கருணாநிதி புரிந்து கொண்டுள்ளார் இந் நிலையானது இன்று பொதுச்சபையைக் கூட்டமுடியாத அளவிற்கு அவரைப் தள்ளியுள்ளது.

அதாவது தி. மு. காவில் இருந்து வை. கோபாலசாமியை வெளியேற்றுவதற்கான தி.மு. க. தலைவர் கருணாநிதியின் திட்டமோ அன்றி இந்திராகாங்கிரஸ், தி. மு. க இந்திய புலனாய்வுத்துறை ஆகிய மூன்றினது கூட்டுத் திட்டமோ இரண்டில் எதுவாகிலும் சரி, இத்திட்டம் தி. மு. காவிற்குள் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது என்பதையே இன்றைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அத்தோடு தி. மு. க தலைவர் கருணாநிதி அதிகாரத்தைக் கைப்பற்றும் போட்டியில் தனது இனத்திற்கு விரோதமாகச் செயற்படவும் தயங்கமாட்டார் என்பதையும் அவரின் அண்மைய செயற்பாடுகள் விளக்குபவையாக உள்ளன.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

## பதவி வெற்றிடங்கள்

1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து ஆசிரியர்

தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் உட்பட க. பொ. த (சா)வில் ஆறு பாடங்களில் சித்தியும், தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்ற சான்றிதழுடன், மேற்படி கற்பித்தலில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர்

தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் என்பவற்றில் சாதாரண சித்தியும் உள்ளடக்கியதாக க. பொ. த (சா)வில் ஆறு பாடங்களில் சித்தியும், மேற்படி விடயத்தில் அனுபவமும், தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்தாளர்

ஆங்கிலத்தில் விசேட சித்தியும், தமிழ், கணிதம் என்பவற்றில் சாதாரண சித்தியும் உள்ளடக்கியதாக க பொ. த (சா)வில் ஆறு பாடங்களில் சித்தியும், மேற்படி விடயத்தில் அனுபவமும், தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4. கணக்குப் பதிவாளர் / காசாளர்

ஆங்கிலம், தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன், க. பொ. த (சா)வில் ஆறு பாடங்களிலும், க. பொ த(உ)வில் கணக்கியலிலும் சித்தியடைந்திருப்பதுடன், கணக்குப் பதிவியல், தமிழ், ஆங்கில தட்டச்சு என்பவற்றில் தகைமையும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சுயமாக தயாரித்து 28-10 93ற்கு முன்னதாக செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பதாரிகளுக்கான செய்முறைப் பரீட்சை 30-10 93 சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் (பரீட்சார்த்திகள் தமது தட்டச்சு இயந்திரங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
21-10-93 (சி/7760)

கௌரவ செயலாளர்.



யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

## ROARING FIRE

(முழுநீள கராட்டிச் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30மணி, மாலை 4, 6 மணி

சனி, ஞாயிறு தினங்களில்
பிற்பகல் 2. 30 மணிக்கு
விசேட காட்சிகளாகவும்

பருத்தித்துறை, இளாலி
கடற்கரும்புலிகளின் தாக்குதல்,
சம்பவங்களை உள்ளடக்கிய
ஆகஸ்ட் மாத ஒளிவீச்சும்
காண்பிக்கப்படும்

(சி-7454)


## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் மணிவாசகம்

அரியாலையை சேர்ந்த பிரபல கட்டட ஒப்பந்தக்காரர் மயில்வாகனம் - பறுபதம் தம்பதிகளின் மூதத புதல்வன் மணிவாசகம் காலமாகிவிட்டார்.

இவர் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், பபிதா, நாவேந்தன் (மகேஸ்வரி வித்தியாசாலை), நளாயினி, தீபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராணி, கலைமணி (கனடா), ஆனந்தி, சண்முகநாதன் கனடா), குகானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தருமராஜா, ஜெயநிதி, [கனடா], தேவகுமாரன் [சுவிஸ்], இந்திரா [கனடா], தயாநிதி [பிரான்ஸ்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 22-10-93 வெள்ளி [இன்று] காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ச. மயில்வாகனம்
(தந்தையார்)

36, கனகரட்ணம் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (6352)

## விபத்தில் மரணம்

(நமது நிருபர்)

திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை இடம்பெற்ற மினிபஸ்-சைக்கிள் விபத்தொன்றில் சைக்கிளில் வந்த வயோதிபர் பலியானார்.

இவரது அடையாள அட்டையிலிருந்து இறந்தவர் புளியங்கூடல் அருவியைச் சேர்ந்த எஸ் கந்தையா (67) என அறியப்பட்டுள்ளது. (சி)

வீரச்சாவு

மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் நடேஸ் அரவன் [இராசதுரை ஜெயரட்ணம் புதுக்குடியிருப்பு தம்பலகமம் திருமலை] 2ஆம் லெப்டினன்ட் செல்வன்/அணு [ஆறுமுகம் ஐயம்பிள்ளை சீராளசிங்கம் பிள்ளையார் கோவிலடி சீனன்குடா திருமலை] ஆகிய இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விவசாய

தொழில்களில் ஈடுபடுவோரே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கான காப்புறுதிகளின் மூலம் இவர்கள் பிற்காலத்தில் நன்மை ஏற்படும்'' என்றார். [சி]

வடக்கில்

தொடர்பான நிர்வாகம் மற்றும் விநியோகம், திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் போன்ற சகல விடயங்களும் மிகவும் இரகசியமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக தனித்தனியான அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளதுடன் தனியான அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்படையணியின் ஒரு தொகுதியினர் ஏற்கனவே வடபகுதி இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்களை வடக்குக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தென்பகுதியில் ஜே வி. பி. இயக்கத்தினர் தீவிரமாக இயங்கிய காலப்பகுதியில் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இப் படையணி சிறிய அளவில் முன்னர் உருவாக்கப்பட்டு செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

பென்சிலின்

பென்சிலின்” போத்தலின் லேபலும் ஒரே மாதிரியாக இருப்பதனால் இவை மாறி விநியோகிக்கப்படுவதாகஅவர் குறிப்பிட்டார்.

எனவே பென்சிலின் மருந்துகளைக் கொள்வனவு செய்வோர் லேபலை அவதானித்து வாங்குப்படி அவர் கேட்டுள்ளார். (சி)

பொருள்கள்

கின்றனர், இதற்கு காரணம் அரசாங்கத்தின் தவறான கொள்கையே ஆகும். வடக்கிலுள்ள மக்களை விடுதலைப் புலிகள் என்று ஒதுக்கி அவர்களுக்கு பல பொருள்கள் கிடைக்காமல் செய்யப்பட்டுள்ளது. 3 வருட காலமாக வடக்கிற்கு மின்சாரம்இல்லை இதனால் அவர்சள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர் அவர்களுக்கு ஏன் மின்சாரம் வழங்கமுடியாது?

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றிய கிளாலி பகுதியை அரசாங்கம் கைவிட்டதன் உண்மையான காரணம் அங்கு தொடர்ந்து நிலைகொள்ள முடியாமையாகுமே தவிர அவர்கள் தெரிவிப்பதைப் போல் கிளாலியை கைப்பற்றிவிட்டு, படகுகளை அழித்துவிட்டு திரும்புவது மட்டும் அவர்களது நோக்கமல்ல இதற்காக அரசு செலவிட்ட பணம் வீண்'' என்றார்.

## 4 போராளிகள் வீரச்சாவு

(மூதூர்)

மூதூர் பொன்னாங் காணி பகுதியால் கடந்த 19 ம் திகதி மதியம் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது அப்பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் ரஜீவன் / இளவேந்தன் (கிருஷ்ணானந்தம் ஜீவானந்தம் - 29 ஔவையார் வீதி, திருமலை) 2-ம் லெப்டினன்ட் கண்ணன் (கந்தசாமி கோபால் - 58 பாரதிபுரம் மூதூர் திருமலை)வீரவேங்கை அருளயன் (செல்லப்பா உதயராசா கட்டைபறிச்சான் மூதூர் திருமலை)வீரவேங்கை தவசீலன் (நாகராசா பால கிருஸ்ணன் கட்டை பறிச்சான் 2-ம்வாட். மூதூர்) இந்நான்கு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



2-ம் லெப். ரஜீவன்



2-ம் லெப். கண்ணன்



வீரவேங்கை அருளயன்



வீரவேங்கை தவசீலன்

## மீன்பிடி உபகரணங்கள் வழங்குவதற்குத் திட்டம்

இடம் பெயர்ந்து அகதி முகாமில் தங்கியிருக்கும் மீனவர்களுக்கான வலை, மற்றும் உபகரணங்கள் வழங்கும் கடற்றொழில் திட்டம் வடமராட்சி மருதங்கேணிப் பிரிவில் இன்று முற்பகல் 10 00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிசைகளில் தங்கியிருக்கும் கடற்தொழிலாளர்களுக்கு இக் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இத் திட்டத்திற்கு வேண்டிய நிதி உதவியை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் வழங்கியுள்ளது.

இன பிரச்சினையை

இதனை கருத்தில் கொண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எதனையும் எடுக்காத அரசு வேறு திசைகளில் கவனத்தை செலுத்தி வருவது வேதனை தருகிறது, நாம் அனைவரும் ஒன்றுபட்டு இப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார்

அரசின்

வீடாக சோதனை நடாத்தி வருவதுடன் பெருமளவு தமிழர்களைக் கைது செய்து பல நாட்களாக விசாரணைகள் எதுவுமின்றி பல்வேறு முகாம்களிலும் தடுத்து வைக்கப்படுகின்றனர். இவ்வாறு விசாரணைகள் எதுவுமின்றி பல நாட்களாக தடுத்து வைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். கைது செய்யப்படுவோர் பற்றிய விபரங்களை கூட பொலிசார் வெளியிட மறுப்பதால் தமது பிள்ளைகளைப்பற்றி அறிய முடியாது பெற்றோர் தவிப்பதாக குற்றம் சாட்டியிருந்தனர்.

இதற்கு பதிலளித்து பேசிய போதே நிஹால் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்ததுடன் கொழும்பில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவல்களை அடுத்தே மேற்படி தேடுதல் வேட்டை நடைபெற்றுவருகிறது என்றார்.


## அறிவித்தல்

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவராகவும் வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசத் தலைவராகவும் - பின்னர் ஆலோசகராகவும் பதவிகள் வகித்த நான் மேற்படி சங்கங்களில் தற்சமயம் எதுவித பதவிகளிலும் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அ ஞானப்பிரகாசடாஸ்
உரிமையாளர்: ஷகி சலூன்
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(சி-7758)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது